பக்கங்கள் – 12
விலை – ரூபா 50

Registered as a Newspaper

# உதயன்

சுடர் : 40
கதிர் : 153

திங்கட்கிழமை
28 ஏப்ரல் 2025

சித்திரை 15 ஆம் நாள்
வள்ளுவர் ஆண்டு 2056

**தங்க விலை சடுதியாக உயர்வு**

விரிவு பக்:-03



# கிளிநொச்சியில் கனமழை வீடுகளுக்குள் வெள்ளம்!

கிளிநொச்சி, ஏப்ரல் 28

கிளிநொச்சியில் நேற்று சுமார் ஒரு மணி நேரம் பெய்த கடும் மழையால் தாழ்நிலப் பகுதிகளில் வெள்ளம் தேங்கியுள்ளது. வீடுகளுக்குள்ளும் வெள்ளம் புகுந்துள்ளதால் மக்களின் இயல்பு வாழ்க்கை பாதிக்கப்பட்டுள்ளது.

11

## 2 ஆம் திகதிவரை மழை தொடரும்!

யாழ்ப்பாணம், ஏப். 28

வடக்கு மற்றும் கிழக்கு மாகாணங்களின் பல பகுதிகளில் தற்போது கிடைக்கும் மழை எதிர்வரும் 2ஆம் திகதிவரை தொடர வாய்ப்புள்ளது

11

## காய்ச்சல் பீடித்த பெண் உயிரிழப்பு

யாழ்ப்பாணம், ஏப்.28

காய்ச்சலால் பீடிக்கப்பட்ட குடும்பப் பெண் ஒருவர் உயிரிழந்துள்ளார்.

யாழ்ப்பாணம், கொழும்புத்துறையைச் சேர்ந்த கமலநாதன் ராஜபத்மினி (வயது - 56) என்ற பெண்ணே உயிரிழந்த

11

## சமநிலையில் முடிந்த வீரர்களின் போர்!

யாழ்ப்பாணம், ஏப்.28

"வீரர்களின் போர்" என்று வர்ணிக்கப்படும் தெல்லிப்பழை மகாஜனக் கல்லூரி மற்றும் சுன்னாகம் ஸ்கந்தவரோதயக் கல்லூரி கிரிக்கெட் அணிகளுக்கிடையி

11

## வெப்பத் தாக்கத்தால் குடும்பஸ்தர் மரணம்

யாழ்ப்பாணம், ஏப்.28

இணுவில் பகுதியிலுள்ள தோட்டம் ஒன்றில் இருந்து ஆண் ஒருவர் உயிரிழந்த நிலையில் நேற்று மீட்கப்பட்டுள்ளார்.

உடுவிலைச் சேர்ந்த ஆறுமுகம் யோகராசா (வயது- 75) என்ற குடும்பஸ்தரே சடலமாக மீட்கப்பட்டுள்ளார். இவர் நேற்றுமுன்தினம் மாட்டுக்கு பூச்சி மருந்து வாங்கச் செல்வதாகக் கூறி வீட்டிலிருந்து புறப்பட்டுச் சென்றநிலை

11

## உள்ளூராட்சித் தேர்தல்; 3,053 முறைப்பாடுகள்

கொழும்பு, ஏப்.28

உள்ளூராட்சி சபைத் தேர்தல் தொடர்பாக நேற்று முன்தினம்வரை 3 ஆயிரத்து 53 முறைப்பாடுகள் கிடைத்துள்ளன என்று தேர்தல்கள் ஆணைக்குழு தெரிவித்துள்ளது.

வன்முறைச் சம்பவங்கள் தொடர் பாக 18

11

## 29,244 பரீட்சார்த்திகள் 3 பாடங்களிலும் தோல்வி

கொழும்பு, ஏப். 28

2024ஆம் ஆண்டு க.பொ.த. உயர்தரப் பரீட்சையில் தோற்றிய மொத்தப் பரீட்சார்த்திகளில் 29 ஆயிரத்து 244 பேர் 3 பாடங்களிலும் சித்தியடையத் தவறியுள்ளனர்.

கொழும்பில் நேற்று நடத்திய ஊடக சந்திப்பில் பரீட்சைகள் ஆணையாளர் இந்தத் தகவலை வெளியிட்டுள்ளார்.

அவர் மேலும் தெரிவித்துள்ளதாவது:-

பாடசாலைகளில் இருந்து

11

நாடாளுமன்றத் தேர்தலில் விட்ட

## தவறைத் திருத்துவதற்கு இதுவே நல்ல சந்தர்ப்பம்

எம்.ஏ.சுமந்திரன் தெரிவிப்பு

யாழ்ப்பாணம், ஏப்.28

எதுவும் பேசமுடியாத பரிதாப நிலையில் தேசிய மக்கள்சக்தியின் யாழ்ப்பாணம் மாவட்ட நாடாளுமன்ற உறுப்பினர்கள் இருக்கின்றார்கள். இவ்வாறான பிரதிநிதிகளை நாடாளுமன்றத்துக்கு அனுப்பியதை நினைத்து மக்கள் தற்போது வெட்கப்படுகிறார்கள். அந்த இழுக்கைத் திருத்தியமைக்கத் தற்போது சந்தர்ப்பம் கிட்டியுள்ளது.

இவ்வாறு இலங்கைத் தமிழரசுக் கட்சியின் பதில் பொதுச்

12

**தேர்தல் புயலாகும் மே தினக் கூட்டம்**

விரிவு பக்:-02



'வெக்கை ஒரு பக்கம்,
மழை இன்னொரு பக்கம்
அதுக்குள்ள இவையின்ர
தேர்தல் புயல் வேறயாம்'

யாழ். பல்கலைக்கழகத்தில்

## ஒழுக்காற்று விதிமுறைகளை மீறி செயற்படும் உத்தியோகத்தர்கள்!

மாணவர்கள் மூவர் முறைப்பாடு

யாழ்ப்பாணம், ஏப்.28

யாழ்ப்பாணம் பல்கலைக்கழகத்தில் மாணவர்கள் மீதான ஒழுக்காற்று நடவடிக்கைகளின்போது ஒழுக்காற்று உத்தியோகத்தர்கள் தனிப்பட்ட விருப்பு, வெறுப்புக்கு அமைய பல்கலைக்கழக மானியங்கள் ஆணைக்குழுவின் ஒழுக்காற்று விதிகளை மீறிச் செயற்படுகின்றனர் என்று பல்கலைக்கழக மானியங்கள் ஆணைக்குழுவில் முறைப்பாடு செய்யப்பட்டுள்ளது.

யாழ்ப்பாணப் பல்கலைக்கழக மாணவர்கள் மூவரே பல்கலைக்கழக மானியங்கள் ஆணைக்குழுவில்

11

## தமிழரசுக் கட்சியை வீழ்த்த தேர்தலைப் பயன்படுத்துக!

கஜேந்திரகுமார் எம்.பி. தெரிவிப்பு



யாழ்ப்பாணம், ஏப்.28

இலங்கைத் தமிழரசுக் கட்சியைத் தோற்கடிப்பதன்மூலமே தமிழ்த் தேசியத்தைப் பாதுகாக்கக்கூடிய புதிய தலைமை ஒன்றை உருவாக்கமுடியும் - இவ்வாறு தெரிவித்துள்ளார் தமிழ்த் தேசிய மக்கள் முன்னணியின் தலைவர் கஜேந்திரகுமார் பொன்னம்பலம்.

11



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

| கொவிசெத | ஹந்தஹண ராசி சுப பலன் | NLB ஜய | மெகா பவர் | மஹஜன சம்பத | தன நிதானய | அத சம்பத |
|---|---|---|---|---|---|---|
| திகதி 27.04.2025 | திகதி 27.04.2025 | திகதி 27.04.2025 | திகதி 27.04.2025 | திகதி 27.04.2025 | திகதி 27.04.2025 | திகதி 27.04.2025 |
| சீட்டிழுப்பு இலக்கம் 4056 | சீட்டிழுப்பு இலக்கம் 1123 | சீட்டிழுப்பு இலக்கம் 0082 | சீட்டிழுப்பு இலக்கம் 2162 | சீட்டிழுப்பு இலக்கம் 5814 | சீட்டிழுப்பு இலக்கம் 1844 | சீட்டிழுப்பு இலக்கம் 0389 |
| ஆங்கில எழுத்து H | வெற்றி இலக்கினம் மீனம் | ஆங்கில எழுத்து P | ஆங்கில எழுத்து I | ஆங்கில எழுத்து J | ஆங்கில எழுத்து B | ஆங்கில எழுத்து J |
| வெற்றி இலக்கங்கள் 04 25 65 69 | வெற்றி இலக்கங்கள் 16 18 39 54 | வெற்றி இலக்கங்கள் 3 0 6 8 | சுப்பர் இலக்கம் 13 | வெற்றி இலக்கங்கள் 3 3 0 5 1 3 | வெற்றி இலக்கங்கள் 11 15 28 80 | வெற்றி இலக்கங்கள் 0 5 1 3 |
| விசேட எழுத்து H | | | வெற்றி இலக்கங்கள் 04 20 40 77 | | விசேட எழுத்து B | |

# மக்களுடைய காணிகளை மக்களுக்கே கையளிப்போம்

## வவுனியாவில் ஜனாதிபதி தெரிவிப்பு

**வவுனியா, ஏப். 28**

**வடக்கில் போர் முடிவடைந்த பின்னர் வனவளத்திணைக்களம் கூகுள் வரைபடத்தினைப் பார்த்து காணிகளுக்கு எல்லையிட்டது. அது தொடர்பாக மீளாய்வு செய்யப்பட்டு மக்களின் காணிகள் அனைத்தும் விடுவிக்கப்படும் என்று ஜனாதிபதி அநுரகுமார திஸாநாயக்க தெரிவித்துள்ளார்.**

வவுனியாவில் நேற்றுமுன்தினம் இடம்பெற்ற தேசியமக்கள் சக்தியின் பரப்புரைக் கூட்டத்தில் கலந்துகொண்டு உரையாற்றுகையில் அவர் இவ்வாறு தெரிவித்தார்.

அவர் மேலும் தெரிவிக்கையில், பிரிவினைவாத அரசியல் தற்போது முடிவுக்குவந்துள்ளது. இழந்த ஒற்றுமையை நிச்சயம் கட்டியெழுப்புவோம். இனவாதத்தை இல்லாமற் செய்து தேசிய ஒற்றுமையை வளர்ப்போம். வடக்கில் பல இடங்கள் போரால் பாதிக்கப்பட்டன. வீடுகளை இழந்தனர், பாதைகளை இழந்தனர், உறவுகளை இழந்தனர். தற்போது போர் முடிந்து 16 வருடங்கள் கழிந்துள்ளன. இன்னும் அதன் காயங்கள் ஆறவில்லை. வடக்கில் தோல்விகண்ட அரசியல்வாதிகள் அந்த இடத்திலே ஒரு முறுகல் நிலையை ஏற்படுத்த முனைகின்றனர். தென் பகுதியில் தோல்விகண்ட அரசியல் தலைவர்கள் அங்கே ஒரு முரண்பாட்டை ஏற்படுத்த முனைகிறார்கள். சட்டங்களை புதிதாக அமைத்தாவது இனவாதத்தைக் களைவோம்.

தேசிய மக்கள் சக்தி அரசாங்கத்தின் முதலாவது ஆட்சிக் காலத்தில் யாழ்ப்பாணத்தில் சர்வதேச கிரிக்கெட் மைதானம் உருவாக்கப்படும். நெல் கொள்வனவுக்காக நாங்கள் 500 கோடி ரூபா வழங்கியுள்ளோம். இனி ஒரு போதும் நெல் விலை குறையாது - என்றார். (ச-110)

| சுபிரி தன சம்பத | | |
|---|---|---|
| திகதி 27.04.2025 | தினம் ஞாயிற்றுக்கிழமை | வெற்றி வாரம் 0522 |
| DLB | ஆங்கில எழுத்து X | வெற்றி இலக்கம் 5 2 1 4 0 4 |

| Super Ball DLB | | |
|---|---|---|
| திகதி 27.04.2025 | தினம் ஞாயிற்றுக்கிழமை | |
| சீட்டிழுப்பு வாரம் 2788 | ஆங்கில எழுத்து O | வெற்றி இலக்கம் 10 13 51 52 |


| சனிதா DLB | | |
|---|---|---|
| திகதி 27.04.2025 | தினம் ஞாயிற்றுக்கிழமை | |
| ஆங்கில எழுத்து Z | வெற்றி இலக்கம் 19 22 64 77 | வெற்றி வாரம் 4949 |

| SASIRI DLB | | |
|---|---|---|
| திகதி 27.04.2025 | தினம் ஞாயிற்றுக்கிழமை | |
| வெற்றி வாரம் 0671 | வெற்றி இலக்கம் 07 21 50 | |

| லக்ன ராசி DLB | | |
|---|---|---|
| திகதி 27.04.2025 | தினம் ஞாயிற்றுக்கிழமை | |
| கும்பம் | வெற்றி இலக்கம் 02 38 39 56 | சீட்டிழுப்பு வாரம் 4500 |

| KAPRUKA DLB | | | |
|---|---|---|---|
| திகதி 27.04.2025 | தினம் ஞாயிற்றுக்கிழமை | | |
| ஆங்கில எழுத்து P | சுப்பர் இலக்கம் 31 | வெற்றி இலக்கம் 10 24 33 70 | வெற்றி வாரம் 1964 |

| அத கோடிபதி DLB | | |
|---|---|---|
| திகதி 27.04.2025 | தினம் ஞாயிற்றுக்கிழமை | |
| ஆங்கில எழுத்து I | வெற்றி இலக்கம் 22 24 57 66 | வெற்றி வாரம் 2614 |



## தேர்தல் புயலாகும் மே தினக் கூட்டம்

கொழும்பு, ஏப். 28

மே தினக் கூட்டங்களைப் பிரமாண்டமான தேர்தல் கூட்டமாக இம்முறை நடத்துவதற்குரிய ஏற்பாடுகளில் பிரதான கட்சிகள் தீவிரமாகக் களமிறங்கியுள்ளன.

மே 6 ஆம் திகதி நடைபெறவுள்ள உள்ளூராட்சிசபைத் தேர்தலுக்குரிய பரப்புரைப் போர் 3 ஆம் திகதி நள்ளிரவுடன் நிறைவுக்குவருகின்றது.

எனவே, மே தினக் கூட்டத்தை பிரமாண்டமான தேர்தல் கூட்டமாக இம்முறை கட்சிகள் நடத்தவுள்ளன.

இதற்கமைய தேசிய மக்கள் சக்தியின் மே தினக் கூட்டம் காலி முகத்திடலில் நடைபெறவுள்ளது.

பிரதான எதிர்க்கட்சியான ஐக்கிய மக்கள் சக்தி, தமிழ் முற்போக்குக் கூட்டணியுடன் இணைந்து தலவாக்கலையில் மே தின நிகழ்வுகளை நடத்துகின்றது.

ஸ்ரீலங்கா பொதுஜன பெரமுனக் கட்சி மொரட்டுவையில் மே தினக் கூட்டத்தை நடத்துவதற்கு ஏற்பாடு செய்துள்ளது.

அதேவேளை வடக்கு, கிழக்கிலுள்ள தமிழ்த் தேசியக் கட்சிகளும் வடக்கு-கிழக்கை மையப்படுத்தி மே தினக் கூட்டம் மற்றும் பேரணிகளை ஏற்பாடு செய்துள்ளன. (ச-44)

### ஐ.நா. வெசாக் விழாவில்

## பங்கேற்பதற்கு அநுர வியட்நாம் பயணம்

கொழும்பு, ஏப். 28

ஐ.நா. வெசாக் தின நிகழ்வில் பங்கேற்பதற்காக ஜனாதிபதி அநுரகுமார திஸாநாயக்க மே மாதம் முதல் வாரத்தில் வியட்நாமுக்கு பயணம் மேற்கொள்ளவுள்ளார்.

ஐ.நா. வெசாக் தின நிகழ்வுகள் மே 6 ஆம் திகதி முதல் 8 ஆம் திகதிவரை மியான்மரின் ஹோ சி மின் நகரில் நடைபெறவுள்ளன. 85 நாடுகளைச் சேர்ந்த பிரதிநிதிகள் உட்பட 2 ஆயிரத்து 700 விருந்தினர்கள் இதில் பங்கேற்கவுள்ளனர் என அறிவிக்கப்பட்டுள்ளது. இலங்கை, இந்தியா, கம்போடியா, நேபாளம், லாவோஸ் ஆகிய நாடுகளில் இருந்து உயர்மட்டத் தலைவர்கள் பங்கேற்பார்கள் எனத் தெரிவிக்கப்படுகின்றது. இலங்கையால் முன்வைக்கப்பட்ட கோரிக்கையின் பிரகாரமே ஐ.நா. வெசாக் தினம் அனுஷ்டிக்கப்பட்டுவருகின்றமை குறிப்பிடத்தக்கது. (ச-44)



### ஒரே ஆண்டில்

## சா/த, உ/த பரீட்சைகளில் தோற்றி சாதனை படைத்த மாணவி

கொழும்பு, ஏப். 28

கொழும்பு விஷாகா வித்தியாலயத்தைச் சேர்ந்த மாணவி ரனுலி விஜேவர்தன ஒரே ஆண்டில் க.பொ.த. சாதாரண தர மற்றும் உயர்தரப் பரீட்சைகளில் சிறந்த பெறுபேறுகளைப் பெற்று சாதனை படைத்துள்ளார்.

2023 (2024) ஆம் ஆண்டுக்கான க.பொ.த சாதாரண தரப் பரீட்சையை கடந்தாண்டு மே மாதத்தில் எழுதிய ரனுலி, ஆங்கில இலக்கியப் பாடத்தில் B சித்தியையும் ஏனைய 8 பாடங்களில் ஏ சித்திகளையும் அவர் பெற்றுள்ளார். அதனைத் தொடர்ந்து நவம்பர் மாதம் நடைபெற்ற க.பொ.த. உயர்தரப் பரீட்சையில் மிக இளம் வயதில் பௌதிக விஞ்ஞானப் பிரிவில் தோற்றிய அவர், 3 சித்திகளைப் பெற்று தேசிய ரீதியில் 963 ஆம் இடத்தைப் பெற்றுள்ளார்.

ரனுலி தனது 10 ஆம் வகுப்புப் படிப்பை நிறைவு செய்யும் போதே உயர்தரப் பரீட்சைக்கான பாடத்திட்டத்துக்கும் தயாராகி வந்துள்ளார்.

பாடசாலை மூலமாக ஒரு குறிப்பிட்ட வயதுக்குக் குறைந்த மாணவர்கள் உயர்தரப் பரீட்சைக்குத் தோற்றுவதற்கு அனுமதி இல்லாத காரணத்தினால், அவர் பாடசாலையிலிருந்து விலகி தனியார் பரீட்சார்த்தி யாகப் பரீட்சையை எழுதியுள்ளார். (ச-இ)

Digitized by Noolaham Foundation
noolaham.org | aavanaham.org

# ஒப்பந்தங்களைப் பகிரங்கப்படுத்த இந்தியாவின் அனுமதி எதற்கு?

கம்மன்பில கேள்வி

**கொழும்பு, ஏப். 28**

**இந்தியாவின் அனுமதியுடன்தான் கைச்சாத்திடப்பட்ட 7 ஒப்பந்தங்களையும் பகிரங்கப்படுத்தமுடியும் என்று அமைச்சரவைப் பேச்சாளர் நளிந்த ஜயதிஸ்ஸ குறிப்பிட்டுள்ளமை முற்றிலும் பொய்யானது. ஒப்பந்தத்தில் எவ்விடத்திலும் அவ்வாறு குறிப்பிடப்படவில்லை என பிவிதுரு ஹெல உறுமயக் கட்சியின் தலைவரும், நாடாளுமன்ற உறுப்பினருமான உதய கம்மன்பில தெரிவித்துள்ளார்.**

அவர் மேலும் தெரிவித்ததாவது-
இந்தியாவுடன் கைச்சாத்திட்ட 7 ஒப்பந்தங்களை அரசாங்கம் இதுவரையில் பகிரங்கப்படுத்தவில்லை. இந்த ஒப்பந்தங்களை பகிரங்கப்படுத்துமாறு எதிர்க்கட்சிகளும், சிவில் அமைப்பினரும் அரசாங்கத்திடம் தொடர்ச்சியாக வலியுறுத்துகின்றனர்.
இந்தியாவின் அனுமதியுடன்தான் இந்த ஒப்பந்தங்களை பகிரங்கப்படுத்தமுடியும் என்ற அமைச்சரவைப் பேச்சாளரின் கருத்து முற்றிலும் பொய்யானது.
இந்தியாவுடன் கைச்சாத்திடப்பட்டுள்ள 7 ஒப்பந்தங்களில் இரண்டு ஒப்பந்தங்களை நான் முழுமையாக பரிசீலனைசெய்தேன். ஒப்பந்தங்களின் எவ்விடத்திலும் இந்தியாவின் அனுமதியைப் பெற வேண்டும் என்று குறிப்பிடவில்லை.
இந்தியா நிலப்பரப்பில் பெரிய நாடாக இருக்கலாம் அதற்காக அரசாங்கம் அச்சமடையக் கூடாது. இலங்கை வலுசக்தி மற்றும் மின்சக்தி துறையில் இந்தியாவை நம்பியிருப்பது இலங்கையின் தேசியப் பாதுகாப்புக்கு எதிர்காலத்தில் அச்சுறுத்தலை ஏற்படுத்தும் - என்றார். (ச-இ)

## தங்கம் விலை சடுதி உயர்வு

கொழும்பு, ஏப்.28
தங்கத்தின் விலை கடுமையாக உயர்ந்துள்ளதால் நகைத் தொழில் பாதிக்கப்பட்டுள்ளதாக நகை வியாபாரிகள் மற்றும் தொழிலதிபர்கள் தெரிவித்துள்ளனர்.
24 சரட் தங்கத்தின் ஒரு பவுண் விலை 2 இலட்சத்து 68 ஆயிரம் ரூபாவாகவும், 22 சரட் தங்கத்தின் ஒரு பவுண் விலை 2 இலட்சத்து 48 ஆயிரம் ரூபாவாவும் அதிகரித்துள்ளது.
இதன்காரணமாக தங்கள் வாடிக்கையாளர்கள் தங்க நகைகளை வாங்குவதில் ஆர்வம் காட்டவில்லை எனவும் தங்க நகை வியாபாரிகள் தெரிவித்துள்ளனர். (ச-இ)

## 'பொன்னர் சங்கர்' கூத்தில் தவறிவீழ்ந்து ஒருவர் பலி!

கொழும்பு, ஏப். 28
நானுஓயா பொலிஸ் பிரிவுக்குட்பட்ட நானுஓயா கிளாஸ்கோ தோட்டத்தில் தமிழர் வரலாற்றை கூறும் பொன்னர் சங்கர் கூத்தின்போது 60 அடி உயரம் கொண்ட மரக்கம்பத்தில் ஏறிய ஒருவர் தவறி வீழ்ந்து உயிரிழந்துள்ளார். இந்தச் சோக சம்பவம் நேற்று ஞாயிற்றுக்கிழமை நடந்துள்ளது. நானுஓயா கிளாஸ்கோ தோட்டத்தைச் சேர்ந்த எம்.சதாசிவம் (வயது - 60) என்பவரே இவ்வாறு உயிரிழந்துள்ளார்.
குறித்த 'பொன்னர் சங்கர்' வரலாற்று நாடக நிகழ்ச்சி நேற்றுமுன்தினம் சனிக்கிழமை இரவு ஆரம்பிக்கப்பட்டு இன்று காலை வரை இடம்பெறவிருந்த நிலையில் குறித்த சம்பவம் இடம்பெற்றுள்ளதாக தெரிவிக்கப்படுகின்றது. (ச-இ)



## வாழ்வக மாணவி பெறுபேற்றில் சாதனை

யாழ்ப்பாணம், ஏப்.28
2024 ஆம் ஆண்டுக்கான கல்விப் பொதுத்தராதர உயர்தரப் பரீட்சையில் வர்த்தகப்பிரிவில் தோற்றிய யாழ்.சுன்னாகம் வாழ்வகத்தில் கற்றுவரும் பார்வைக் குறைபாடுடைய மாணவி தவராசா சிவாங்கி பொருளியல், வணிகக் கல்வி, கணக்கீடு ஆகிய மூன்று பாடங்களிலும் சித்திபெற்று யாழ்.மாவட்ட மட்டத்தில் 411 ஆவது இடத்தைப் பெற்றுச் சாதனையீட்டியுள்ளார். சுன்னாகம் வாழ்வக நிறுவனத்தில் உயர்தரத்தில் வர்த்தகப் பிரிவில் சித்திபெற்ற முதலாவது மாணவி என்ற பெருமையை அவர் தனதாக்கியுள்ளார். (ச-66)

## மட்டுவில் கிழக்கில் பிடிபட்ட முதலை

யாழ்ப்பாணம், ஏப். 28
மட்டுவில் கிழக்கில் வீடொன்றுக்குள் நுழைய முயன்ற 8 அடி கொண்ட முதலை அந்தப் பகுதி இளைஞர்களால் மடக்கிப்பிடிக்கப்பட்டுள்ளது.
இந்தச் சம்பவம் நேற்றுமுன்தினம் இரவு நடந்துள்ளது. இரவு நாய்கள் குரைக்கும் சத்தம் கேட்டு விழித்த வீட்டுக்காரர், அங்கு பொருத்தப்பட்டிருந்த சிசிரிவி கமெராவில் பார்த்தபோது முதலை இரும்புக் கூண்டை இடித்துத் திறக்க முயற்சிப்பதை அவர் அவதானித்து, உடனடியாக அயலவர்களுக்குத் தகவல் கொடுத்துள்ளார்.
சம்பவ இடத்துக்கு வந்த இளைஞர்கள், முதலையைச் சுற்றிவளைத்துப்பிடித்து கயிற்றால் கட்டியுள்ளனர். இதுதொடர்பில் கிராம அலுவலருக்கு அறிவிக்கப்பட்டு, கிளிநொச்சி வனஜீவராசிகள் திணைக்களத்துக்கு தகவல் கொடுக்கப்பட்டதையடுத்து அங்கிருந்து முதலை மீட்கப்பட்டுள்ளது. (ச-9)





ஊரார் பிள்ளையை ஊட்டி வளர்த்தால் தன் பிள்ளை தானே வளருமெண்டுறது உண்மைதான் எண்டதை இந்தமுறை ஏ.எல். ரிசல்ட் சொல்லுது. சும்மா சொல்லக்கூடாது, இந்தமுறை எங்கட பெடியள் கெத்துக்காட்டியிருக்கிறாங்கள். எங்க திரும்பினாலும் 'ஐலண்டில பெர்ஸ்ட், ஐலண்டில செக்கண்ட்' எண்ட றிசல்டாத்தான் கிடக்குது. வடக்கில கல்வி அழியுது, நெளியுது எண்டு ஒருபக்கம் புலம்பல் இருந்தாலும் இப்பிடி 'நாங்கள்தான் அப்பவும் இப்பவும் படிப்பில புலியள்' எண்டு எங்கட பெடியள் நெத்தியடியா செய்துகாட்டேக்க, புல்லரிக்கத்தான் செய்யுது. அதிலையும் இந்தமுறை யாழ்ப்பாணம் இந்துக்கல்லூரிப் பெடியள் வேற லெவலில கலக்கியிருக்கிறாங்கள். அப்பிடி நல்ல ரிசல்ட் எடுத்த பெடியளில ஒருத்தர், இஞ்சத்தை இடமில்லை. மலையகத்தில இருக்கிற பூண்டுலோயாவில இருந்து இஞ்ச வந்து படிச்சு,3 ஏ எடுத்து , தேசிய ரீதியில 60 ஆவது இடத்தைப் பிடிச்சு, மெரிட்டில கம்பஸூக்கு இஞ்சினியரிங் படிக்கப்போகப்போறார்.

'அதெப்பிடி பூண்டுலோயாப் பெடியன் ஜப்னா ஹிண்டுவில படிக்க ஏலும்? இஞ்ச பக்கத்து ஊர்க்காரருக்கே அட்மிசன் கிடைக்கிறது கடும் கஷ்டம், அதுக்குள்ள இப்பிடி இன்னொரு மாகாணத்தில இருந்து வந்து படிக்கிறதெண்டால் உள்ளால ஏதும் அலுவல் பார்த்திருப்பினமோ? 'எண்டு சிலர் நினைக்கலாம். ஆனால் உங்கட நினைப்பில நீங்களே செருப்பால அடிக்கிறமாதிரி சிறப்பான செய்கை ஒண்டை இந்துக்கல்லூரி 2021 ஆம் ஆண்டில இருந்தே செய்துவருகுது. மலையகம், கிழக்குமாகாணம், வன்னிப்பகுதியளில இருக்கிற , சயன்ஸ் படிப்பிக்க வாய்ப்பில்லாத பள்ளிக்கூடங்களைச் சேர்ந்த பெடியளுக்கு, யாழ்.இந்துவில படிக்கிற சான்ஸைக் குடுக்கினம். கொரோனா வந்த பிறகு, ஸூமில எல்லா இடத்தைச்சேர்ந்த வைக்கும் படிப்பிக்கேக்கத்தான் இப்பிடி ஒரு ஐடியா வந்ததாம். அதுக்குப் பிறகு இப்பிடி ஒவ்வொரு வருசமும் வெளி இடத்துப் பெடியளும் வந்து படிச்சு நல்ல றிசல்ட் எடுக்கினமாம்.

அப்பிடித்தான் இந்தமுறை பூண்டுலோயாவில இருந்துவந்த அபிசேக்தேவர் எண்ட பெடியனும் 3 ஏ எடுத்து, தன்னைப் படிப்பிச்ச யாழ். இந்துவுக்கு செஞ்சோற்றுக்கடன் தீர்த்திருக்கிறார். எங்கட இடத்துப்பெடியள் மட்டுமில்லாமல், இப்பிடி படிக்கிற திறமை இருந்தும் சரியான கல்வி கிடைக்காத பிள்ளையளைக் கொண்டந்து, நல்லாப் படிப்பிச்சு, அவையையும் குன்றின் மேலிட்ட விளக்குகளாகப் பிரகாசிக்க விடுறதுக்கும் ஒரு மனசு வேணும். அது யாழ். இந்துவிட்ட இருக்கு. அந்தக் குணத்துக்குத்தான் போல, இப்ப கோடையில இஞ்ச கொட்டுமழை பெய்யிறமாதிரி ரிசல்ட் மழையும் பொழிஞ்சிருக்கு. நல்லார் ஒருவர் உளரேல் அவர் பொருட்டு எல்லோர்க்கும் பெய்யுமாம் மழை. யாழ். இந்துவுக்கு இப்பிடியான பெருந்தன்மையான செய்கைக்கு ஒரு 'சல்யூட்'!

padsi@uthayan.com - பட்சி

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# Invitation for Bids (IFB)
## URBAN COUNCIL, VAVUNIYA

1. The Chairman, Divisional Procurement Committee (Div.PC), on behalf of Secretary, Urban Council, Vavuniya now invites sealed bids from eligible and qualified bidders for the works listed in the table below.

| S. No | Bid No. | Name of the Work | Estimated Civil Cost (LKR in. Mn) | | CIDA Grade Required | Required Bid Security Amount (Rs.) | Required Bid Security Validity Period | Contract Period (Days) |
|---|---|---|---|---|---|---|---|---|
| 1 | NP/14/43(2)/06/WD/CF/19/2025 | Package-01-2025 | | 3.79 | C9 & Above (Highway Construction) | 38,000.00 | 31.07.2025 | 84.0 |
| | | Improvements to Avaiyar Veethy Balance works | 1.26 | | | | | |
| | | Improvements to Kovilputhukulam Cemetery road Balance works | 0.67 | | | | | |
| | | Improvements to Kovilputhukulam 8th lane | 0.72 | | | | | |
| | | Metalling & Tarring work at Kovilputhukulam 10th lane | 1.14 | | | | | |
| 2 | NP/14/43(2)/06/WD/CF/20/2025 | Package-02-2025 | | 4.00 | C9 & Above (Highway Construction) | 40,000.00 | 31.07.2025 | 84.0 |
| | | Metalling & Tarring work at Maruthankulam 2nd Lane | 1.27 | | | | | |
| | | Improvements to Alagar Veethy | 0.25 | | | | | |
| | | Improvements to Josap Vass Veethy | 1.27 | | | | | |
| | | Improvements to Rani Mill road Balance Works | 1.02 | | | | | |
| | | Construction of gravelling for Kandy road 10A lane | 0.19 | | | | | |
| 3 | NP/14/43(2)/06/WD/CF/21/2025 | Package-03-2025 | | 4.22 | C8 & Above (Highway Construction) | 43,000.00 | 31.07.2025 | 84.0 |
| | | Metalling & Tarring work at Thekkawatha Aanchaneyar Kovil back road (Katkuli 3rd, 4th lane 2nd Connecting road) | 0.85 | | | | | |
| | | Metalling & Tarring work at Moonrumurippu Kali Kovil road | 0.83 | | | | | |
| | | Metalling & Tarring work at Katkuli 2nd, 3rd lane 1st Connecting road | 0.85 | | | | | |
| | | Improvements to 3rd Cross Street | 1.69 | | | | | |
| 4 | NP/14/43(2)/06/WD/CF/22/2025 | Package-04-2025 | | 3.81 | C9 & Above (Highway Construction) | 39,000.00 | 31.07.2025 | 84.0 |
| | | Metalling & Tarring work at Alaigarai veethy | 0.85 | | | | | |
| | | Improvements to Globe mill road | 1.69 | | | | | |
| | | Improvements to Vairavarkovil 8th lane | 0.42 | | | | | |
| | | Improvements to Pathiniyarmahilankulam 1st lane (Metalling & Tarring Work at Pathiniyarmahilankulam Sub Lanes) | 0.85 | | | | | |
| 5 | NP/14/43(2)/06/WD/CF/23/2025 | Package-05-2025 | | 4.07 | C8 & Above (Highway Construction) | 41,000.00 | 31.07.2025 | 84.0 |
| | | Improvements to Kandy Road 14th lane (Thekkawaththai Cemetery Road) | 0.68 | | | | | |
| | | Improvements to Karappankadu Internal roads (Karappankadu 2nd lane, Karappankadu Internal roads) | 1.69 | | | | | |
| | | Improvements to Thirunavatkulam Sivan Veethy | 1.70 | | | | | |

2. Bidding will be conducted through National Competitive Bidding (NCB) Procedure.
3. Interested eligible bidders may obtain further information from Secretary, Urban Council, Vavuniya (T.P:024-222 2275/ 024 222 8066 email: ucvavuniya@yahoo.com) from 09.00 Hrs to 14.30 Hrs and inspect the bidding documents at the address Secretary, Urban Council, Vavuniya.
4. Qualification requirements to qualify for contract award is given in "Section 4 of the Qualification Information and Section 5 of the Schedule / Bidding Data" of the Procurement Document.
5. A complete set of Procurement Documents in English language may be purchased by interested bidders on the submission of a written request to the address Secretary, Urban Council, Vavuniya from 29.04.2025 until 14.05.2025 from 09.00 Hrs to 14.30 Hrs. Upon payment of a non-refundable fee of Three Thousand Rupees (Rs.3,000.00).The method of payment will be by cash.
6. Bids must be delivered to the address Chairman, Divisional Procurement Committee, Urban Council, Vavuniya on or before 15th May 2025 and 10.30 Hrs. Late bids shall be rejected. Bids will be opened in the presence of Bidders' representatives who choose to attend in person or vital at the address same above.
7. All bids must be accompanied by a Bid-Security of an amount and validity date mentioned in the table above.
8. The pre-bid meeting will be held on 08.05.2025 at 10.30 Hrs at the Urban Council, Vavuniya. The address (es) referred to above is (are):

Chairman
Divisional Procurement Committee,
Urban Council,
Vavuniya.
28.04.2025

(CR/44843) J-1

# கோப்பாயில் குருதிக்கொடை

யாழ்ப்பாணம், ஏப்.28
கோப்பாய் பிரதேச செயலக ஊழியர் நலன்புரிச்சங்கம், யாழ்ப்பாணம் போதனா மருத்துவமனையின் இரத்தவங்கிப் பிரிவு ஆகியன இணைந்து நடத்தும் குருதிக்கொடை முகாம் நிகழ்வு இன்று திங்கட்கிழமை காலை 9 மணி முதல் கோப்பாய் பிரதேச செயலக மண்டபத்தில் இடம்பெறவுள்ளது.
குருதிக்கொடை முகாம் நிகழ்வில் கலந்துகொள்ளுமாறு நிகழ்வின் ஏற்பாட்டாளர்கள் கேட்டுள்ளனர். (ச-66)

## சேவை நயப்பும் பாராட்டி வாழ்த்துதலும்



Best Wishes

எமது பாடசாலையில் அதிபராகக் கடமையாற்றி
நெடுந்தீவுக் கோட்டக்கல்விப்பணிப்பாளராக
பதவி உயர்வு பெற்றுச் செல்லும்

**திரு. ஜேசுதாசன் மகிந்தன்**
**(B.A, PGDEM, Dip.in P.E, Spl.trd.in P.E.)**

அவர்கள் எமது பாடசாலை வளர்ச்சிக்கு
அரும்பணியாற்றியமைக்கு நன்றி கூறுவதுடன்
மேலும் பல பதவி உயர்வுகளைப் பெற மனமார
வாழ்த்துகின்றோம்.

வாழ்த்துவோர்:
**ஆசிரியர் சமூகம்**
**யா/உரும்பிராய் றோமன் கத்தோலிக்க**
**தமிழ்க் கலவன் பாடசாலை.**

(CS/3035) J-1

## பெயர் மாற்றம்

தலைமன்னார் அம்பாள் நகர், தலைமன்னாரில் வசிக்கும் **பிரான்சிஸ் செக்காயினா கிறேசி** ஆகிய நான் எனது பெயரை **பிரான்சிஸ் கலைவாணி** என மாற்றம் செய்வதோடு இனிவரும் சகல ஆவணங்களிலும் **பிரான்சிஸ் கலைவாணி** என்றே கையொப்பம் இடுவேன் என இலங்கை ஜனநாயக சோசலிச குடியரசு மக்களுக்கு அறியத்தருகின்றேன்.

**பிரான்சிஸ் கலைவாணி**

## ENGLISH LANGUAGE & LITERATURE

**For Grade 9, 10 & 11**
**CAMBRIDGE CLASSES**

A1 – Movers, A2 – Flyers & Key For Schools
On Weekends ( Sat & Sun)
By **Mr. Benildus Johnson** B.A. Lit & M.A. TESL
ISA English - Colombo

**At Ariyalai Community Centre, Ariyalai.**
**Classes Commence on the 10th & 11th May 2025.**

**Contact: 0776624500 – joravini@yahoo.com**

## 31ம் நாள் நினைவஞ்சலி

கடந்த 29.03.2025 அன்று இறைவனடி சேர்ந்த புங்குடுதீவு
கமநல சேவைகள் நிலைய குழுத்தலைவர்
**கை. ஸ்ரீஸ்காந்தன்** அவர்களின்
பாசமிகு மனைவி

**அமரர் வசந்தா ஸ்ரீஸ்காந்தன்**

அவர்களின் பிரிவால் துயருற்றிருக்கும் குடும்பத்தினருக்கு எமது ஆழ்ந்த அனுதாபங்களைத் தெரிவிப்பதுடன் அன்னாரின் ஆத்மா சாந்தியடைய இறைவனைப் பிரார்த்திக்கின்றோம்.

**பிரிவுத்துயரில் பங்குகொள்ளும்**
**புங்குடுதீவு கமநல சேவைகள் நிலைய சமூகம்**

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

உதயன்
மக்கள் மனம் நிறைந்த தமிழ் நாளிதழ்
உண்மை - நேர்மை - அஞ்சாமை

நாளொரு நல்வார்த்தை

கல்வி வேரானது கசக்கும்.
ஆனால் அதன் விளைச்சல் இனிக்கும்.

– அரிஸ்ரோட்டில் –

# எது தோல்வி?


இலங்கையில் மாணவர்களின் வாழ்வியலைத் தீர்மானிக்கும், பல்கலைக்கழக அனுமதிக்கான போட்டிப்பரீட்சையான உயர்தரப்பரீட்சைப் பெறு பேறுகள் நேற்றுமுன் தினம் வெளியாகியுள்ளன. இதில் இம்முறை வடக்கு மாகாண மாணவர்கள் அகில இலங்கை ரீதியாக உயிரியல். கணிதம், வர்த்தகம், கலை ஆகியபிரிவுகளில் அதியுச்சப் பெறுபேறுகளைப் பெற்றுள்ளனர். வெற்றியீட்டிய மாணவர்களைக்கொண்டாடும் நாம், இந்தப் பரீட்சையில் சித்தியடைய அல்லது பல்கலைக்கழக அனுமதி பெறத் தவறிய மாணவர்களைப் பற்றிச் சிந்திக்கத்தவறிவிடுகின்றோம்.

பரீட்சையில் குறைந்த மதிப்பெண்கள் பெற்ற மாணவர்கள் மனச்சோர்வு, தாழ்வுச்சிக்கல், சமூக அழுத்தம் போன்ற பல்வேறு உளப்பாதிப்புகளுக்கு ஆளாகின்றனர். சிலர் உயிரை மாய்த்தல் போன்ற தீவிர முடிவுகளை எடுக்கும் அபாயத்திலும் இருப்பார்கள். இதனைக் கடந்தகாலங்களில் கண்டுணர்ந்துமுள்ளோம். இலங்கையின் போட்டிசார் கல்விமுறையில், பல்கலைக்கழக அனுமதிக்கான வாய்ப்புகள் மிகவும் குறைவாக இருப்பதால், இந்தத் தோல்வியால், தமது வாழ்க்கையே முடிந்துவிட்டது என்றே பெரும்பாலான மா ணவர்கள் நினைக்கின்றனர். ஆனால் அது தவறு, அவர்களின் வாழ்வு இன்னும் வளமாக மாறுவதற்கான சந்தர்ப்பங்கள் நிறையவே உள்ளன என்பதை அவர்களுக்கு பெற்றோரும், ஆசிரியர்களும், சமூகமும் தான் தெளிவுபடுத்தவேண்டும். ஆனால் பெரும்பாலானோர் இதனைச் செய்யத் தவறு வதாலேயே, உயர்தரப் பரீட்சையில் சித்தியடையத் தவறிய மாணவர்களின் வாழ்வும் திசை மாறிப் போய்விடுகின்றது. தொழிற்கல்வி, திறன் அடிப்படையிலான பயிற்சிகள், தனியார் கல்வி நிறுவனங்கள் போன்ற பிற வாய்ப்புகளை நோக்கி இந்த மாணவர்களை வழிப்படுத்த வேண்டிய பொறுப்பு சமூகத்தின் கைகளிலேயே உள்ளது.

இந்தச் சூழலில், இலங்கையின் கல்விமுறை பரீட்சைசார் கல்விமுறையாக இருப்பதால் மாணவர்களின் திறன்களைச் சிதைக்கும் வகையில் உருவாக்கப்பட்டுள்ளதையும் நாம் ஏற்றுக்கொள்ளத்தான்வேண்டும். வெறும் பெறுபேற்றை வைத்து மாணவர்களின் தரத்தை அளவிடுவதை யும், அவர் களின் வாழ்க்கையைத் தீர்மானிப்பதையும் கொண்டிருக்கும் நமது கல்விக்கொள்கையில் நிச்சயம் மாற்றம் கொண்டுவரப் படவேண்டும். ஆனால் கிட்டத் தட்ட 50 வருடங்களுக்கு முந்திய கல்விக்கொள்கையைத் தான் நாம் இன்னும் மார்க் கண்டேயர் சிவலிங்கத்தைக் கட்டிப்பிடித்தது போல விடாமல் பற்றிப்பிடித்துள்ளோம். எமது கல்விமுறை பரீட்சையில் ஏற்படும் தோல்வியை , அடுத்த நகர்வுக்கான முயற்சியாகக் காட்டுவதில்லை, மாறாக அது வாழ்வில் அழிக்கமுடியாத ஒரு களங்கமாக அடையாளப்படுத்துவதாலேயே மாணவர்கள் மனதளவில் பெரியளவில் பாதிக்கப்படுகின்றனர். எனவே எமது கல்வித்திட்டம் மாற்றியமைக்கப்படுவது இத்தகைய மாணவர்களின் உளவுணர்வோடு விளையாடும்நிலைக்கு முற்றுப்புள்ளி வைக்கும்.

வீழ்வது சகஜம், வீழ்ந்த பின்னும் எழாமல் இருப்பதே தோல்வி, வீழ்ந்தும் வீரியத்தோடு எழுந்துநிற்றல் சாதனை. இம்முறை சித்தியடையத் தவறியவர்கள், தமக்கு சாதனைக்கான கதவு திறக்கப்பட்டுள்ளது என்பதை மனதில் கொள்வார்களா?

செய்தி : 021 493 0000
விளம்பரம் : 021-493 1111
செய்தி : news@uthayan.com
விளம்பரம் : advt@uthayan.com



# ஐரோப்பியத் தூதுக்குழு இன்று இலங்கை வருகை





கொழும்பு, ஏப்.28

ஜி.எஸ்.பி. பிளஸ் சலுகை தொடர்பில் கலந்துரையாட ஐரோப்பிய ஒன்றியப் பிரதிநிதிகள் இன்று திங்கட்கிழமை இலங்கைக்கு விஜயம்மேற்கொள்ளவுள்ளனர்.

ஐரோப்பிய நாடுகளுக்கான ஏற்றுமதிகளின்போது இலங்கைக்கு வழங்கப்பட்டுள்ள ஜீ.எஸ்.பி. பிளஸ் சலுகையை தொடர்ந்தும் வழங்குவதற்கான நிபந்தனைகளில் ஒன்றாக 27 சர்வதேச பிரகடனங்கள் தொடர்பில் இலங்கை அடைந்துள்ள முன்னேற்ற நிலை குறித்து ஆராய்வதே இந்த விஜயத்தின் நோக்கமாகும்.
இன்று இலங்கை வந்தடையும் ஐரோப்பிய ஒன்றியப் பிரதிநிதிகள் குழு எதிர்வரும் மே மாதம் 7ஆம் திகதி வரை இலங்கையில் தங்கியிருந்து மீளாய்வுகள் மற்றும் கலந்துரையாடல்களை மேற்கொள்ளவுள்ளது.
இலங்கையின் ஆகக்கூடியளவில் ஏற்றுமதிகளை மேற்கொள்ளும் நாடுகளின் பட்டியலில் ஐரோப்பிய ஒன்றியம் இரண்டாமிடத்தில் உள்ளது.
ஐரோப்பிய ஒன்றிய நாடுகளுக்கு இலங்கை வருடாந்தம் மூன்று பில்லியன் டொலர் பெறுமதியான ஏற்றுமதிகளை மேற்கொண்டுவருகின்றமை குறிப்பிடத்தக்கது. (ச-இ)

# கோட்டையில் தவறிவீழ்ந்து மாணவன் சாவு

கொழும்பு, ஏப்.28
காலி கோட்டை சுவரிலிருந்து பல்கலைக்கழக மாணவர் ஒருவர் தவறி வீழ்ந்து உயிரிழந்துள்ளார் என பொலிஸார் தெரிவித்துள்ளனர்.
சம்பவத்தில் ஜோன் கொத்தலாவல பாதுகாப்பு பல்கலைக்கழகத்தின் முதலாம் ஆண்டு மாணவனே இவ்வாறு உயிரிழந்துள்ளார். (ச-இ)



# விஜேவீரவின் தங்கை காலமானார்

கொழும்பு, ஏப்.28
மக்கள் விடுதலை முன்னணியின் ஸ்தாபகத் தலைவர் ரோஹண விஜேவீரவின் உடன்பிறந்த தங்கை சித்ராணி விஜேவீர நேற்றுமுன் தினம் சனிக்கிழமை உயிரிழந்துள்ளார்.
ரோஹண விஜேவீரவின் உடன்பிறந்தவர்களில் இதுவரை காலமும் உயிர்வாழ்ந்த ஒரே நபராக அவர் அறியப்பட்டிருந்தார்.
இறுதிக்காலத்தில் அவர் தங்காலையில் வசித்து வந்த நிலையில் உயிரிழந்துள்ளார். (ச-இ)

# தேர்தல் விதிமீறல்
## 28 வேட்பாளர்கள் கைது

உள்ளூராட்சிசபைத் தேர்தல் சட்டங்களை மீறியமை மற்றும் தேர்தலுடன் தொடர்புடைய ஏனைய குற்றங்கள் தொடர்பில் 28 வேட்பாளர்கள் கைதுசெய்யப்பட்டுள்ளனர் என்று பொலிஸ் ஊடகப் பிரிவு தெரிவித்துள்ளது. உள்ளூராட்சிசபைத் தேர்தல் தொடர்பில் இதுவரை 330 முறைப்பாடுகள் கிடைத்துள்ளன என்றும் பொலிஸ் ஊடகப்பிரிவு குறிப்பிட்டுள்ளது. (ச-இ)

# 494 கிலோ போதைப்பொருள் எரித்தழிப்பதற்கு நடவடிக்கை

கொழும்பு, ஏப்.28
வழக்கு நடவடிக்கைகள் நிறைவடைந்த 494 கிலோ 48 கிராம் நிறையுடைய ஹெரோய்ன் போதைப்பொருள், புத்தளம் பாலாவிப் பகுதியில் அமைக்கப்பட்டுள்ள எரியூட்டல் நிலையத்தில் இன்று எரித்து அழிக்கப்படவுள்ளதாகப் பொலிஸார் தெரிவித்துள்ளனர்.
கொழும்பு மேல் நீதிமன்றத்திலிருந்து குறித்த போதைப்பொருள் பெற்றுக் கொள்ளப்படவுள்ளது.
அவற்றை விசேட பொலிஸ் பாதுகாப்பின்கீழ் கொண்டுசென்று எரியூட்டப்பட்டு அழிப்பதற்கு நடவடிக்கை முன்னெடுக்கப்பட்டுள்ளது. (ச-இ)

நாளை
செவ்வாய்க்கிழமை -சித்திரை 16
29.04.2025
சுபநேரம் : 10.28 - 11.58
ராகுகாலம் : 02.58 - 04.28

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org



# இன்றைய
(ராசிபலன்)

**மேடம்:** இன்று எதிலும் பொறுமையைக் கடைப்பிடிக் கவும். தாயின் உடல்நலனில் கவனம்தேவை. சிலருக்கு எதிர்பாராத பணவரவுக்கு வாய்ப்பு உண்டாகும். தெய்வப் பணிகளில் ஈடுபடுவதற்கான சந்தர்ப்பம் ஏற்படும். வியாபாரத்தில் சக வியாபாரிகளால் சிறுசிறு பிரச்சினைகள் ஏற்பட்டு நீங்கும்.

**இடபம்:** வழக்கமான பணிகளிலும் மிகுந்த கவனத் துடன் ஈடுபடவேண்டிய நாள். எதிலும் பொறுமை அவசியம். மற்றவர்களுடன் வாக்குவாதத்தில் ஈடுபட வேண்டாம். சிலருக்கு எதிர்பாராத பணவரவுடன் திடீர்ச்செலவுகளும் ஏற்படும். சகோதரர்களால் சில பிரச்சினைகள் ஏற்படும்.

**மிதுனம்:** மனதில் தன்னம்பிக்கை அதிகரிக் கும். அக்கம்பக்கத்தில் இருப்பவர்களுடன் ஏற் பட்ட மனஸ்தாபங்கள் நீங்கும். முக்கிய முடிவு எடுப்பதற்கு உகந்தநாள். உடல் ஆரோக்கியம் மேம்படும். அரசாங்கவகையில் எதிர் பார்க்கும் காரியம் அனுகூலமாகமுடியும்.

**கடகம்:** முயற்சிகளில் வெற்றி உண்டாகும். சிலருக்கு உறவினர்கள் வகையில் எதிர்பாராத பொருள்சேர்க்கைக்கு வாய்ப்பு உண்டு. வாகனத் தில் செல்லும்போது சற்றுக் கவனமாகஇருக் கவும். சிலருக்குக் குலதெய்வப்பிராா்த்தனையை நிறைவேற்றும் வாய்ப்பு ஏற்படும்.

**சிம்மம்:** மனதில் சிறு குழப்பம் ஏற்பட்டுநீங்கும். உறவினர்களால் குடும்பத்தில் சில பிரச்சினைகள் ஏற்பட்டாலும் அதனால் பாதிப்பு எதுவுமிருக்காது. சகோதரவகையில் எதிர்பார்த்த காரியம் இழுபறி யாகும். வியாபாரத்தில் பணியாளர்களால் பிரச்சி னைகள் ஏற்படும்.

**கன்னி:** தன்னம்பிக்கையுடன் செயற்படுவீர்கள். கணவன் மனைவிக்கிடையே கருத்துவேறுபாடு ஏற்பட வாய்ப்பு உள்ளதால் அனுசரித்துச்செல்வது நல்லது. தாயாரின் உடல் ஆரோக்கியத்தில் கவனம் தேவை. நீண்ட நாள்களாக எதிர்பார்த்த நல்ல செய்தி கிடைக்கக்கூடும்.

**துலாம்:** காரியங்கள் அனுகூலமாகமுடியும். குடும்பம் தொடர்பான முக்கிய முடிவு எடுப்பதற்கு ஏற்ற நாள். சகோதரவகையில் மகிழ்ச்சியுடன் ஆதாயமும் உண்டாகும். உறவினர்கள்மூலம் மகிழ்ச்சிதரும் செய்தி கிடைக்கும். தாயின் விருப்பத்தைப் பூர்த்திசெய்வீர்கள்.

**விருச்சிகம்:** உற்சாகமான நாள். உறவினர்கள் வகையில் புதிய ஆடை, ஆபரணங்களின் சேர்க்கை உண்டாகும். சகோதரவகையில் ஆதாயம் ஏற்படும். வாகனத்தில் செல்லும்போது கவனம்தேவை. கணவன் மனைவிக்கிடையே அந்நியோன்யம் அதிகரிக்கும்.

**தனுசு:** தேவையான பணம் இருப்பினும் தேவையற்ற செலவுகளும் ஏற்படுவதால், கையிருப்புக் கரைவதுடன் சிலருக்குக் கடன் வாங்கவும்நேரிடும். தாய்மாமன்வழியில் செல வுகள் ஏற்படும். தாயின் தேவையை நிறை வேற்ற சற்று அலைச்சல் ஏற்படும்.

**மகரம்:** அனுகூலமான நாள். எதிர்பார்த்த நல்ல செய்தி இன்று கிடைக்கும். கணவன் மனைவிக்கிடையே ஏற்பட்டிருந்த பிணக் குகள் நீங்கும். புதிய முயற்சிக்கு வாழ்க்கைத் துணையின் ஆலோசனை பயனுள்ளதாக இருக்கும்.

**கும்பம்:** அரசாங்கவகையில் எதிர்பார்த்த காரியம் சற்று இழுபறிக்குப் பின்னர் முடிந்து விடும். தந்தைவழியில் சில பிரச்சினைகள் ஏற்பட்டாலும் சமாளித்துவிடுவீர்கள். சகோதர வகையில் எதிர்பாராத செலவு ஏற்படும்.

**மீனம்:** எதிர்பாராத பணவரவுடன் திடீர்ச்செலவு களும் ஏற்படும். கணவன் மனைவிக்கிடையே அந்நியோன்யம் அதிகரிக்கும். மற்றவர்களுடன் இணக்கமான அணுகுமுறை அவசியம். வியாபாரத்தில் எதிர்பார்த்ததைவிட இலாபம் அதிகமாக இருக்கும்.

# மேதினப் பேரணியும் கூட்டமும்

யாழ்ப்பாணம், ஏப்.28

புதிய ஜனநாயக மாக்சிச லெனினிசக் கட்சியின் மேதினப் பேரணியும் கூட்டமும் யாழ்.நகரில் எதிர்வரும் முதலாம் திகதி பி.ப .3.30 மணியளவில் இடம்பெறவுள்ளன.

யாழ்ப்பாணம் ஐந்து சந்தியிலிருந்து மேதினப் பேரணி ஆரம்பமாகி பிரதான வீதிகள் ஊடாக யாழ்ப்பாணம் மத்திய கல்லூரி மைதானத்துக்கு எதிரே அமைந்துள்ள றிம்மர் மண்டப வளாகத்தைச் சென்றடையும். கட்சியின் வடபிராந்தியச் செயலாளர் கா.செல்வம் கதிர்காமநாதன் தலைமையில் மேதினக் கூட்டம் நடைபெறும்.

குறித்த கூட்டத்தில் மூத்த பொதுவுடமைவாதியும், புதிய ஜனநாயக மாக்சிச லெனினிசக் கட்சியின் பொதுச் செயலாளருமான சி.கா.செந்திவேல் பிரதான உரையாற்றவுள்ளார்.

உழைக்கும் மக்களின் புரட்சிகர இசைப்பாடல்கள், செம்முகம் ஆற்றுகைக் குழுவைச் சேர்ந்த சத்தியசீலன் தலைமையிலான இசைக் குழுவினரால் இசைக்கப்படும் என்றும் புதிய ஜனநாயக மாக்சிச லெனினிசக் கட்சியினர் தெரிவித்துள்ளனர். (ச-41-66)


# புத்தகதின விழாவும் நூல் அறிமுகமும்

யாழ்ப்பாணம், ஏப்.28

தீவகவலய ஆசிரியர் ஆலோசகர் ம. கேசவன் தலைமையில், சர்வதேச புத்தகதின விழாவும் பரிசு நாடக நூல் அறிமுகவிழாவும் யாழ்ப்பாணம் தொல்புறம் சர்வோதய மண்டபத்தில் நாளைமறுதினம் புதன்கிழமை பி.ப. 4 மணிக்கு இடம்பெறவுள்ளன.

பிரதம அதிதியாக யாழ்ப்பாணம் தேசிய கல்வியியற் கல்லூரி சிரேஷ்ட விரிவுரையாளர் கலாநிதி. பி. தனபாலன் கலந்துகொள்வுள்ளார் எனத் தெரிவிக்கப்பட்டுள்ளது. (ச-33-63)

# யாழ்ப்பாணத்தில் கலாசார ஒற்றுமைக்கு எல்.பீ. பினான்ஸ் அளித்த உந்துசக்தி சித்திரைக் குதூகலம் - ஏப்ரல் யாழ்.விழா 2025



கலாசாரப் பாதுகாப்பிலும் அர்த்தமுள்ள சமூக ஈடுபாட்டிலும் ஆழ்ந்த அர்ப்பணிப்பைக் கொண்டுள்ள எல்.பீ. பினான்ஸ் அதனை எடுத்துக்காட்டும் முகமாக "ஆதவனின் சித்திரைக் குதூகலம் ஏப்பிரல் யாழ். விழா 2025" என்ற நிகழ்ச்சியின் பிரதான அனுசரணையாளராக பெருமையுடன் செயற்பட்டது. இந்த நிகழ்ச்சி ஏப்ரல் 5ஆம் திகதி, யாழ்ப்பாணத்திலுள்ள அரியாலை சரஸ்வதி சனசமூக நிலைய மைதானத்தில் இடம்பெற்றது. தமிழ்சிங்கள புத்தாண்டைக் கொண்டாடும் முகமாக ஆதவன் வானொலி மற்றும் ஆதவன் தொலைக்காட்சி என்பன ஏற்பாடு செய்த இந்த நிகழ்வு பாரம்பரிய விளையாட்டுகள், கலைநிகழ்ச்சிகள் மற்றும் கலாசார ஒற்றுமையைப் பிரதிபலிக்கும் அம்சங்கள் உள்ளடங்கலாக மிகவும் சிறப்பாக நடைபெற்றது. இதில் ஆயிரக்கணக்கான பிரதேசவாசிகள் கலந்து கொண்டனர்.

இந்த நிகழ்வு ஒரு குதூகல பொழுதுபோக்கு என்பதற்கும் அப்பால் அடையாளங்கள், சொந்த உணர்வு மற்றும் வலுவான கலாசாரப் பாரம்பரியங்களின் கொண்டாட்டமாகவும் இருந்தது. எல்.பீ. பினான்ஸை பொறுத்தவரையில், இந்த அனுசரணை வெறும் வெளிப்படைத் தோற்றம் என்பதைவிட மேலாக இருந்தது. இலங்கை முழுவதிலுமுள்ள சமூகங்களை மேம்படுத்துவதற்கும் வலுவூட்டுவதற்கும் நிறுவனம் கொண்டுள்ள இலட்சிய நோக்கத்தின் உண்மையான பிரதிபலிப்பாகவும் அது அமைந்தது. எல்.பீ. பினான்ஸ் மூன்று பிரதான பாரம்பரிய நிகழ்ச்சிகளுக்கு தீவிர ஆதரவை வழங்கியது. சைக்கிள் ஓட்டப்போட்டி, ஆண்களுக்கும் பெண்களுக்குமான கபடி விளையாட்டுச் சுற்றுப் போட்டி, சறுக்குமரம் ஏறும் போட்டி என்பனவே அவையாகும். இப்போட்டிகள் பங்குபற்றுநர்களுக்கிடையிலான ஒற்றுமை, விளையாட்டுத்திறன், பிரதேசப் பெருமை ஆகிய உணர்வுகளைப் பிரதி பலித்தன. பிரதேசத்தின் எல்லாப் பகுதிகளையும் சேர்ந்தவர்கள் இப் போட்டிகளில் கலந்துகொண்டனர்.

எல்.பீ. ஃபினான்ஸின் சந்தைப்படுத்தல் பிரதானி திரு. சுதீப் பெரேரா இந்த நிகழ்வு பற்றி கருத்து வெளியிடுகையில், "நாம் சேவையாற்றும் சமூகங்களுக்கு ஒத்தாசையாகவும் பக்கபலமாகவும் இருக்க வேண்டும் என்ற எமது கொள்கைக்கு அமைவாகவே ஏப்ரல் யாழ். விழா 2025இல் பங்குபற்றினோம். புத்தாண்டுப் பாரம்பரியங்கள் எமது தேசிய அடையாளத்தில் ஆழமாக வேரூன்றியுள்ளன. அவற்றிற்கு ஆதரவளிப்பதன் மூலம் எமது கலாசாரத்தைப் பாதுகாக்கவும் எம்மை ஒற்றுமைப்படுத்தும் பிணைப்புகளை வலுப்படுத்தவும் நாம் எதிர்பார்க்கின்றோம். இவ்வாறே நாம் நம்பிக்கையைக் கட்டியெழுப்புகின்றோம், இவ்வாறே நாம் ஒருங்கிணைந்து வளர்ச்சியடைகின்றோம்" என்று கூறினார்.

எல்.பீ. ஃபினான்ஸ் வெறும் அனுசரணையாளராக மாத்திரம் இல்லாமல், இந்த நிகழ்வின் செயற்பாட்டாளர் என்ற முறையிலும் தீவிரமாக ஈடுபட்டது. நிகழ்ச்சிகளின் சுமுகமான செயற்பாட்டிற்காக ஏற்பாட்டாளர்களுக்கு ஒத்துழைப்பு வழங்கிய நிறுவனம், நாள் முழுவதும் பங்குபற்றுநர்கள் மற்றும் சமூகத்தினருடன் பிரத்தியேகமாக ஈடுபட்டு உறவுகளைப் பகிர்ந்துகொண்டது. நிறுவனத்தின் பிரசன்னம் கொண்டாட்டங்களுக்கு உத்வேகம் அளித்தது. உள்ளூர் சமூகத்தின் இதயத்துடிப்பை உணர்ந்து, மக்களை இலக்காகக் கொண்டு செயற்படும் ஒரு நிறுவனம் என்ற முறையில் எல்.பீ. பினான்ஸின் பங்களிப்பையும் அது வலியுறுத்தியது.

போட்டிகளில் பிரதேசவாசிகள் ஆர்வத்துடன் பங்குபற்றினர். கூடியிருந்த மக்கள் கரகோஷம் செய்து அவர்களை ஊக்கப்படுத்தினர். சைக்கிள் ஓட்டப்போட்டி, கபடிப் போட்டிகள் மற்றும் சறுக்குமரம் ஏறும் போட்டி ஆகியவற்றில் வெற்றியீட்டியவர்கள் அவர்களின் சாதனைக்காக மட்டுமன்றி பங்கேற்பிற்காகவும் பாராட்டுதலைப் பெற்றனர்.

இந்த நிகழ்ச்சியின் வெற்றிக்காக ஏற்பாட்டுக் குழுவினர், தொண்டர்கள் மற்றும் யாழ்ப்பாண சமூகத்தினர் அனைவருக்கும் எல்.பீ. ஃபினான்ஸ் தனது மனமார்ந்த நன்றியைத் தெரிவித்துக்கொண்டது. நீடித்து நிலைத்திருக்கும் சாதகமான தாக்கத்திற்கான தனது அர்ப்பணிப்பை மீண்டும் வலியுறுத்திய எல்.பீ. ஃபினான்ஸ், இது போன்ற முன்முயற்சிகள் ஒரு நிதி நிறுவனம் என்பதற்கு மேலாக சமூகங்களின் வளர்ச்சி, கலாசாரம் மற்றும் முன்னேற்றத்திற்கு நம்பிக்கையான பங்காளியாக விளங்க வேண்டும் என்ற தனது விரிவான இலட்சிய நோக்கின் ஒரு பகுதியாக அமைகின்றன என்றும் தெரிவித்துள்ளது.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# இலங்கையில் தனது வலையமைப்பை விரிவாக்குகிறது Hero MotoCorp






Hero MotoCorp நிறுவனம் இலங்கையில் தனது இருப்பை மேலும் வலுப்படுத்தவும், தனது விநியோக வலையமைப்பை விரிவுபடுத்தவும் Abans Auto நிறுவனத்துடன் இணைந்து புதிய வாகன வகைகளை அறிமுகப்படுத்தியுள்ளது. இந்த அறிமுகத்தில் Hero Xoom ஸ்கூட்டர் மற்றும் 110CC மோட்டார்சைக்கிள், HF டீலக்ஸ், Xtreme 125R மற்றும் Hunk 160R 4V மோட்டார்சைக்கிள் வகைகள் அடங்கும்.

உலகின் மிகப்பெரிய மோட்டார்சைக்கிள் மற்றும் ஸ்கூட்டர் உற்பத்தியாளராகத் திகழும் Hero MotoCorp, 2012 ஆம் ஆண்டு முதல் Abans Auto உடன் இணைந்து இலங்கையில் தனது வணிக நடவடிக்கைகளை வெற்றிகரமாக மேற்கொண்டு வருகிறது. 2025 ஆம் ஆண்டு இறுதிக்குள் நாடு முழுவதும் 500 விற்பனை நிலையங்கள் மற்றும் சேவை நிலையங்களை நிறுவுவதன் மூலம் தனது வாடிக்கையாளர்களுக்கு சிறந்த தயாரிப்புகள் மற்றும் சேவைகளை வழங்க நிறுவனம் திட்டமிட்டுள்ளது. இந்த விரிவாக்கத்தின் மூலம், இலங்கையின் அனைத்துப் பகுதிகளிலும் உள்ள வாடிக்கையாளர்களுக்கு உதிரி பாகங்கள் மற்றும் விற்பனைக்குப் பிந்தைய சிறந்த சேவைகளை எளிதாக வழங்க முடியும்.

**இலங்கையில் அறிமுகப்படுத்தப்பட்ட புதிய Hero MotoCorp தயாரிப்புகள்:**

- Xoom 110 (Carb Version): சிறியதும் ஸ்டைலானதுமான இந்த ஸ்கூட்டர், நகர்ப்புறங்களில் உங்கள் தினசரி பயணத்திற்கு ஏற்ற வசதியான மற்றும் இலகுவான ஓட்டுதல் அனுபவத்தை வழங்கும். இது இலங்கையின் 110cc பிரிவில் முதல் மற்றும் ஒரே ஸ்கூட்டர் ஆகும்.
- Hunk 160R 4V (Single Channel ABS): கம்பீரமான மற்றும் வேகமான தோற்றத்தை விரும்புபவர்களுக்காக, செயல்திறனை அடிப்படையாகக் கொண்டு வடிவமைக்கப்பட்டுள்ளது.
- Xtreme 125R: 125cc பிரிவில் சக்தி, செயல்திறன் மற்றும் மிகச்சிறந்த தோற்றத்துடன் வரும் இது, இந்த மோட்டார்சைக்கிள் பிரிவின் புதிய போட்டியாளராக அறிமுகமாகிறது.
- HF Deluxe (AllBlack Edition): நம்பகமான மற்றும் கவர்ச்சியான தோற்றத்துடன் கூடிய இந்த மோட்டார்சைக்கிள் சிறந்த ஓட்டுதல் அனுபவத்தை வழங்கும்.

விலை:

| | |
|---|---|
| Xoom 110* | : ரூ. 699,900 |
| HF Deluxe* | : ரூ. 577,900 |
| Xtreme 125R | : ரூ. 776,900 |
| Hunk 160R 4V | : ரூ. 909,900 |

இந்த புதிய Hero MotoCorp வாகனங்களை Abans Auto விற்பனை பிரதிநிதிகளிடமிருந்து விரைவில் பெற்றுக்கொள்ள முடியும். Hero MotoCorp நிறுவனத்தின் சர்வதேச வணிகப் பிரிவுத் தலைவர் சஞ்சய் பண்ட் கூறுகையில், இலங்கையின் வணிக விரிவாக்கத்தில் Abans உடனான கூட்டு முயற்சி முக்கிய பங்கு வகிக்கிறது. இந்த கூட்டு முயற்சியின் மூலம் Hero பிராண்ட் இலங்கையில் ஒரு வீட்டுப் பெயராக மாறியுள்ளதுடன், சந்தையில் ஒரு நல்ல நிலையையும் பெற்றுள்ளது. புதிய மோட்டார்சைக்கிள் மற்றும் ஸ்கூட்டர் தயாரிப்பு வரிசை சிறந்த செயல்திறன், ஸ்டைலான வடிவமைப்பு மற்றும் நவீன தொழில்நுட்பம் ஆகியவற்றை ஒருங்கிணைத்து வாடிக்கையாளர்களுக்கு சிறந்த பயண அனுபவத்தை வழங்கும். இந்த புதிய தயாரிப்பு வரிசையின் அறிமுகம் மற்றும் சிறந்த விற்பனை மற்றும் சேவைகளை அறிமுகப்படுத்துவதன் மூலம், இலங்கை மக்களுடன் ஒரு வலுவான உறவை உருவாக்க நாங்கள் நம்புகிறோம் என்றும் அவர் மேலும் தெரிவித்தார். Abans Auto (பிரைவேட்) லிமிடெட் நிறுவனத்தின் முகாமைத்துவ பணிப்பாளர் திரு. பீயூ பெரேரா கருத்து தெரிவிக்கையில், Hero MotoCorp உடனான இந்த கூட்டாண்மை புதுமை மற்றும் நம்பகத்தன்மையுடன் இணைந்துள்ள எங்கள் விநியோக வலையமைப்பின் மீதான வாடிக்கையாளர்களின் நம்பிக்கையை கட்டியெழுப்ப ஒரு வாய்ப்பை வழங்கியுள்ளது. மேலும், நாடு தழுவிய விற்பனை மற்றும் சேவை வலையமைப்பின் மூலம் புதிதாக அறிமுகப்படுத்தப்பட்ட மோட்டார்சைக்கிள் மாதிரிகள் மிகச்சிறந்த முறையில் வாடிக்கையாளர்களைச் சென்றடைந்து இலங்கையில் வெற்றிகரமான பயணத்திற்கு வழி வகுக்கும் என்று அவர் குறிப்பிட்டார்.

### Abans Hero MotoCorp:

Hero MotoCorp இந்தியாவில் இரு சக்கர வாகன சந்தையில் முன்னணியில் உள்ளது. தொடர்ச்சியாக 24 ஆண்டுகளாக மோட்டார்சைக்கிள் மற்றும் ஸ்கூட்டர் உற்பத்தியில் உலகின் மிகப்பெரிய உற்பத்தியாளராக Hero MotoCorp திகழ்ந்து வருகிறது. இதன் தயாரிப்புகள் ஆசியா, ஆப்பிரிக்கா மற்றும் லத்தீன் அமெரிக்கா உட்பட 48 நாடுகளில் 120 மில்லியனுக்கும் அதிகமான வாடிக்கையாளர்களால் பயன்படுத்தப்பட்டு வருகின்றன. மேலும், Hero வின் புதிய மின்சார இரு சக்கர வாகனம் VIDA என்ற பெயரில் தயாரிக்கப்படுகிறது. Hero MotoCorp Ather Energy மற்றும் Euler Motors போன்ற நிறுவனங்களில் முக்கிய முதலீடுகளை செய்துள்ளது. மேலும் HarleyDavidson மற்றும் Zero Motorcycles போன்ற உலகளாவிய பிராண்டுகளுடன் கூட்டு சேர்ந்து செயல்பட்டு வருகிறது. இந்த நிறுவனம் இந்தியாவில் 6 உற்பத்தி ஆலைகளையும், கொலம்பியாவில் 1 மற்றும் பங்களாதேஷில் 1 உற்பத்தி ஆலையையும் நடத்தி வருகிறது. ஆராய்ச்சி மற்றும் மேம்பாட்டு மையமாக இந்தியாவில் Innovation and Technology, (CIT) மற்றும் ஜெர்மனியில் Tech Centre Germany (TCG) ஆகியவற்றை கொண்டுள்ளது. மதிப்புமிக்க Dow Jones Sustainability Index (DJSI) இல் உள்ள ஒரே இந்திய இரு சக்கர வாகன உற்பத்தியாளர் Hero MotoCorp ஆகும். விளையாட்டுத் துறையை ஊக்குவிக்கும் வகையில், கோல்ஃப், கால்பந்து, ஹாக்கி மற்றும் கிரிக்கெட் உள்ளிட்ட பல்வேறு விளையாட்டு நிகழ்வுகளை Hero MotoCorp ஸ்பான்சர் செய்து வருகிறது. Hero MotoSports Team Rally உலகளாவிய மோட்டார்ஸ்போர்ட்ஸ் நிகழ்வுகளில் இந்தியாவை பிரதிநிதித்துவப்படுத்துகிறது. உலகப் புகழ்பெற்ற கோல்ஃப் சாம்பியன் டைகர் வூட்ஸ், Hero MotoCorp இன் உலகளாவிய பிராண்ட் பங்காளராக உள்ளார்.



# கிளி.பொலிஸ் நிலையத்தில் புத்தாண்டுக் கொண்டாட்டம்

கிளிநொச்சி, ஏப்.28

கிளிநொச்சி பொலிஸ் நிலையத்தில் புதுவருட நிகழ்வுகள் நேற்று ஞாயிற்றுக்கிழமை நடைபெற்றது.

பொது மக்களுக்கான விளையாட்டு நிகழ்வுகள், மரதன் ஓட்டம், துவிச்சக்கர வண்டி ஓட்டப் போட்டி, முட்டி உடைத்தல், யானைக்குக் கண் வைத்தல் போன்ற போட்டிகளும் இடம்பெற்றன.

நிகழ்வில் பிரதம விருந்தினராக கிளிநொச்சி மாவட்டப் பதில் செயலர் எஸ். முரளீதரன், கரைச்சிப் பிரதேச செயலாளர் த.முகுந்தன், பொலிஸ் அதிகாரிகள், பொதுமக்கள், பொலிஸ் உத்தியோகத்தர்கள், பொலிஸ் உத்தியோகத்தர்களின் குடும்பத்தினர் எனப் பலரும் கலந்துகொண்டனர்.

(ச-41-113)

# தந்தை செல்வா நினைவு யாழில் கடைப்பிடிப்பு



யாழ்ப்பாணம், ஏப். 28

தந்தை செல்வா நிலைய அறக்கட்டளை குழுவின் எற்பாட்டில் தந்தை செல்வாவின் 48 ஆவது ஆண்டு நினைவேந்தல் நிகழ்வு நேற்று யாழ். தந்தை செல்வா நினைவிட வளாகத்தில் தந்தை செல்வா நினைவு அறங்காவற்குழு ஆயர் கலாநிதி சு.ஜெபநேசன் தலைமையில் இடம்பெற்றது.

நிகழ்வில் இலங்கை தமிழரசு க்கட்சியின் பொதுச் செயலாளர் சட்டத்தரணி எம்.ஏ.சுமந்திரன், இலங்கை தமிழரசுக் கட்சியின் பதில் தலைவர் சி.வி.கே.சிவஞானம் உள்ளிட்ட பலர் கலந்துகொண்டு தந்தை செல்வா சிலைக்கு மலர் மாலை அணிவித்து அஞ்சலி செலுத்தினர்.


தொடர்ந்து ஈழத்து தமிழ் பேசும் மக்கள் அரசியலின் தனிகரற்ற தலைவன் தந்தை செல்வா என்னும் தலைப்பில் நினைவு பேருரையினை மொழித்துறை தென்கிழக்குப் பல்கலைக்கழக ஒலுவில் முதுநிலை பேராசிரியர் கலாநிதி றமீம் அப்துல்லா நிகழ்த்தினர்.

(ச-17,27,125,66,20)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## மரண அறிவித்தல்

தோற்றம் 27 . 05 . 1940



மறைவு 26 . 04 . 2025

# மயில்வாகனம் சண்முகநாதன்

அன்னார் காலஞ்சென்ற மயில்வாகனம்- நல்லம்மா தம்பதிகளின் அன்பு மகனும் காலஞ்சென்ற சரவணமுத்து-சின்னம்மா தம்பதிகளின் அன்பு மருமகனும் பரமேஸ்வரியின் அன்புக்கணவரும் துஷ்யா (Germany), குமுதா (Assistant Principal - J/Mahajana college), கவிதா (Teacher. C/Royal college), சுகந்தா (Canada) ஆகியோரின் அன்புத் தந்தையும் சித்திவிநாயகர் (Germany), குமணன் (SDO, DS Office -Chankanai), குமரன் (Head of Tea Department- Saadeldeen Tea), சிவாகரன் (Canada) ஆகியோரின் அன்பு மாமனாரும் காலஞ்சென்ற மகேஸ்வரி மற்றும் அன்னலக்சுமி, நாகரத்தினம் காலஞ்சென்ற யோகராசா மற்றும் பூபாலராசா, ரத்தினமலர், குணநேசன் ஆகியோரின் அன்புச் சகோதரனும் காலஞ்சென்றவர்களாக அன்னேஸ்வரி, குமாரசாமி, அருமை நாயகம், சந்திரநாயகம் மற்றும் தங்கரத்தினம் ஆகியோரின் அன்பு மைத்துனரும் அபிஷா, சாருகா, கோபிகா, அட்ஷயன், தரணிஷன், கர்னிகா, ஹர்சின், ஜஸ்வின், ஹனீஸ்கா, யஸ்வினி, யனுஷன் ஆகியோரின் அன்புப் பேரனும் ஆவார்.

அன்னாரின் இறுதிக்கிரியைகள் (29.04.2025) செவ்வாய்க்கிழமை நண்பகல் 12 மணியளவில் அன்னாரது இல்லத்தில் கிரியைகள் இடம்பெற்று பூதவுடல் காரைக்கால் இந்து மயானத்திற்கு எடுத்துச் செல்லப்படும்.


இந்த அறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக்கொள்ளவும்.

**முத்தட்டுமட 2ம் ஒழுங்கை,**
**கோண்டாவில் மேற்கு,**
**கோண்டாவில்.**

**தகவல்: குடும்பத்தினர்**
**021 224 1367**

## மரண அறிவித்தல்

தோற்றம் 17 . 08 . 1965



மறைவு 26 . 04 . 2025

# மரியான் அந்தோனிப்பிள்ளை லயனல்

**(இலங்கை புகையிரத திணைக்கள பாதைப்பிரிவு உத்தியோகத்தர் வவுனியா, அகில இலங்கை சமாதான நீதவான், )**

ஊர்காவற்துறையை பிறப்பிடமாகவும் வவுனியா புகையிரத நிலைய விடுதியை வதிவிடமாகவும் கொண்ட திரு மரியான் அந்தோனிப்பிள்ளை லயனல் நேற்று முன்தினம் (26.04.2025) சனிக்கிழமை காலமானார்.

அன்னார் காலஞ்சென்றவர்களான மரியான் சபினம்மா தம்பதியினரின் மகனும் காலஞ்சென்றவர்களான அன்ரனி மேரிறோஸ் தம்பதியினரின் மருமகனும் மேரிஸ்ரெலாவின் (அனார்கலி) கணவரும் டன்ஸ்ரன் (களனி பல்கலைக்கழகம்), நெவில்டன்ஜோ (வவுனியா தமிழ் மத்திய மகாவித்தியாலயம் வவுனியா) ஆகியோரின் பாசமிகு தந்தையும் ஆவார்.

அன்னாரின் இறுதி இரங்கல் திருப்பலி இன்று (28.04.2025) திங்கட்கிழமை பிற்பகல் 4.00 மணியளவில் மாகியம்பதி புனித செபஸ்ரியார் ஆலயத்தில் ஒப்புக்கொடுக்கப்பட்டு புனித செபஸ்ரியார் ஆலய சேமக்காலையில் நல்லடக்கம் செய்யப்படும்.

இவ் அறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக் கொள்ளும்படி கேட்டுக்கொள்கின்றோம்.

**மாகியப்பிட்டி**
**சண்டிலிப்பாய்**

**தகவல்:**
**குடும்பத்தினர்**

## மரண அறிவித்தல்

மலர்வு 08 . 07 . 1939



உதிர்வு 26 . 04 . 2025

# சின்னத்துரை தியாகராஜா

(ஓய்வூதியர்- விவசாயத் திணைக்களம்)

மலேசியாவைப் பிறப்பிடமாகவும் வயாவிளான் மற்றும் கோண்டாவில் மேற்கை வசிப்பிட மாகவும் கொண்ட திரு.சின்னத்துரை தியாகராஜா அவர்கள் 26.04.2025 அன்று கால மானார். அன்னார் காலஞ்சென்ற சின்னத்துரை- ஆச்சிமுத்து அவர்களின் ஏகபுத்திரனும் காலஞ்சென்ற விசாலாட்சியின் அன்புத் தம்பியும் திருமதி தயாளமலர் அவர்களின் பாசமிகு கணவரும் புருஷோத்தமன் (கனிய அளவையியலாளர் Q.S - டுபாய்), தாரணி (ஆசிரியை-யா/கோண்டாவில் பரஞ்சோதி வித்தியாலயம்), வாணி (லண்டன்), கல்யாணி (ஆசிரியை-யா/உயரப்புலம் மெ.மி.த. க.பாடசாலை), கோபிதாஸ் (லண்டன்) ஆகியோரின் பாசமிகு தந்தையும் பிரிந்தினி (B.A.), ரமேஸ்குமார் (செயலாளர்- யாழ்.மாவட்ட கூட்டுறவுச் சபை), தனஞ்சயன் (பொறியியலாளர்- லண்டன்), அரவிந்தன் (ஆசிரியர்- யா/கொக்குவில் இராமகிருஷ்ண வித்தியாலயம்) ஆகியோரின் அன்பு மாமனாரும், நிந்துஷன், டினோஷன், வித்தகி, ரக்ஷன், கவிசன், சாயிஷா, லக்ஷசரா, யாழினி ஆகியோரின் அன்புப் பேரனும் ஆவார்.

அன்னாரது இறுதிக் கிரியைகள் எதிர்வரும் செவ்வாய்க்கிழமை 29.04.2025 அன்று முத்தட்டுமட வீதி, கோண்டாவில் மேற்கு இல்லத்தில் நடைபெற்று பூதவுடல் தகனக்கிரியைக்காக காரைக்கால் இந்து மயானத்திற்கு எடுத்துச் செல்லப்படும்.

இந்த அறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக்கொள்ளவும்.

**முத்தட்டுமட வீதி,**
**கோண்டாவில் மேற்கு,**
**கோண்டாவில்**

**தகவல்: மனைவி, மக்கள், மருமக்கள், பேரப்பிள்ளைகள்**
**077 6383 962**
**077 6169 395**

## மரண அறிவித்தல்

தோற்றம் . 12 . 03 . 1948



மறைவு . 27 . 04 . 2025

# திருமதி இராசலட்சுமி பொன்னுத்துரை

மண்கும்பான் மேற்கு 5ம் வட்டாரத்தைப் பிறப்பிடமாகவும் செட்டித்தெரு நல்லூரை வதிவிடமாகவும் கொண்ட திருமதி இராசலட்சுமி பொன்னுத்துரை அவர்கள் நேற்று (27.04.2025) ஞாயிற்றுக்கிழமை காலமானார்.

அன்னார் காலஞ்சென்றவர்களான சுப்பிரமணியம் சௌந்தரம் தம்பதியினரின் அன்பு மகளும், காலஞ்சென்றவர்களான வேலுப்பிள்ளை-தையல்முத்து தம்பதியினரின் அன்பு மருமகளும் காலஞ்சென்ற பொன்னுத்துரையின் அன்பு மனைவியும் காலஞ்சென்ற குணசீலன் மற்றும் குமுதினி, யசோதினி ஆகியோரின் அன்புத் தாயாரும், றோகினி, குணசீலன் ஆகியோரின் அன்பு மாமியாரும் சாருகா, ஹறிசன், கவினாஷ், திவிஷ்னா ஆகியோரின் அன்புப் பேர்த்தியாரும் காலஞ்சென்றவர்களான இராமச்சந்திரன், மோகனச்சந்திரன் மற்றும் சொரூபராணி, புஸ்பராணி ஆகியோரின் அன்புச் சகோதரியும் ஆவார்.

அன்னாரின் இறுதிக்கிரியைகள் தற்போதைய வதிவிடத்தில் இன்று (28.04.2025) திங்கட்கிழமை பகல் 12.00 மணியளவில் அவரது இல்லத்தில் இடம்பெற்று பி.ப. 2.00 மணியளவில் தகனக் கிரியைகளுக்காக பூதவுடல் செம்மணி இந்து மயானத்திற்கு எடுத்துச் செல்லப்படும்.

இவ் அறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக் கொள்ளும்படி கேட்டுக்கொள்கின்றோம்.

**இல 50/31 செட்டித்தெரு**
**நல்லூர்**

**தகவல்:**
**குடும்பத்தினர்**
**077 332 2247, 077 726 0252**

(CS 30083) V-1

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

ஓம் விராட் விஸ்வப் பிரம்மநே நமஹ

# மரண அறிவித்தல்



## திருமதி கந்தசாமி செல்வராணி

யாழ்ப்பாணத்தைப் பிறப்பிடமாகவும் சாவகச்சேரி சங்கத்தானையை வதிவிடமாகவும் கொண்ட திருமதி கந்தசாமி செல்வராணி (வவா) அவர்கள் (26.04.2025) சனிக்கிழமை காலமானார்.

அன்னார் காலஞ்சென்ற பொன்னுத்துரை - தையல்நாயகி ஆகியோரின் அன்புமகளும் சுப்பிரமணியம் - செல்லாச்சி ஆகியோரின் அன்பு மருமகளும் காலஞ்சென்ற கந்தசாமி (யா/ சாவகச்சேரி இந்து ஆரம்பப் பாடசாலை- இளைப்பாறிய ஆசிரியர்) அவர்களின் அன்பு மனைவியும் சரோஜினிதேவி, வில்வராஜா, ஆகியோரின் அன்புச் சகோதரியும் கௌரி, சியாமளா, ரஜனி, றேணுகா, நிர்மலா, மஞ்சுளா, துஸ்யந்தி ஆகியோரின் அன்புத் தாயாரும் முரளிதரன், மனோகர், கணேஸ்ஜயா, முருகதாஸ், கோபாலபிள்ளை, சதீஸ் குமார், பால்ராஜ் ஆகியோரின் மாமியும் பிரவீனா, தர்ஷனா, லக் ஷனா, வினோபாஜி, சங்கீதா, கயல்விழி, நிதர்சன், நிவேதா, கீர்த்தன், பிரவீன், பவித்திரன், நிஷாந்தினி, பிரசாந், லக் ஷிகரன், சஜீபன், சுபாங்கி, சாகித்யன், சாத்வீகன் ஆகியோரின் பாசமிகு பேர்த்தியும் அதிதி, ஆதிரன், சாஷ்வினி, பிரதிக்ஷா ஆகியோரின் பாசமிகு பூட்டியும் ஆவார்.

அன்னாரின் இறுதிக் கிரியைகள் பொன்னம்பலம் வீதி, கச்சாய் றோட், சாவகச்சேரியில் உள்ள அன்னாரின் இல்லத்தில் திங்கட்கிழமை (28.04.2025) 12 மணியளவில் நடைபெற்று பூதவுடல் தகனக்கிரியைக்காக கண்ணாடிப்பிட்டி இந்து மயானத்துக்கு எடுத்துச் செல்லப்படும்.

இந்த அறிவித்தலை உற்றார், உறவினர்கள், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக்கொள்ளு மாறு கேட்டுக்கொள்கின்றோம்.

பொன்னம்பலம் வீதி,
கச்சாய் வீதி,
சாவகச்சேரி.

தகவல்
குடும்பத்தினர்
தொடர்பு: 076 616 6699

# மரண அறிவித்தல்

தோற்றம் 04 . 10 . 1968

மறைவு 27 . 04 . 2025



## கமலநாதன் இராஜபத்மினி

கொழும்புத்துறையைப் பிறப்பிடமாகவும், வசிப்பிடமாகவும் கொண்ட கமலநாதன் இராஜபத்மினி அவர்கள் நேற்று (27.04.2025) ஞாயிற்றுக்கிழமை இறைபாதம் அடைந்து விட்டார்.

அன்னார் க.இ. கமலநாதனின் (ஓய்வு பெற்ற விரிவுரையாளர் - தேசிய கல்வியியல் கல்லூரி யாழ்ப்பாணம்) அன்பு மனைவியும், சுபானுஜன் (St.John college பழைய மாணவன்), ஓவியா (வேம்படி மகளிர் கல்லூரி), ஆகியாரின் அன்புத் தாயாரும், காலஞ்சென்ற துரைராசா மற்றும் - புவனேஸ்வரி தம்பதியரின் அன்பு மகளும், காலஞ்சென்றவர்களான இரத்தினம் - தங்கம் தம்பதியரின் அன்பு மருமகளும், பரமேஸ்வரி, சகுந்தரராஜா, ரஞ்சிதமலர், ஆனந்த ராஜா (Denmark), விஜய ரஞ்சினி, ரவிந்திர ராஜா (Norway), இராஜ ரோகினி (பிரான்ஸ்), சற்குண ராஜா (சுவிஸ்) காலம் சென்ற சந்திர லதா ஆகியோரின் அன்புச் சகோதரியும், சித்திரிராதேவி, காலஞ்சென்ற சண்முகசுந்தரம், கலா ஜோதி, சிவலோகநாதன், ரெஜினா, இன்ப ராஜா, மஞ்சுளா, விஜயபாலன், கமலீற்றா, கருனேஸ்வரன் ஆகியோரின் மைத்துனியும் ஆவார்.

அன்னாரின் இறுதிக்கிரியைகள் இன்று (28.04.2025) திங்கட்கிழமை முற்பகல் 11.30 மணியளவில் 2ம் குறுக்குத்தெரு கொழும்புத்துறையில் உள்ள அவரது இல்லத்தில் நடைபெற்று பூதவுடல் தகனக் கிரியைகளுக்காக கொழும்புத்துறை துண்டி இந்து மயானத்திற்கு எடுத்துச்செல்லப்படும். இவ் அறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரையும் ஏற்றுக் கொள்ளுமாறு கேட்டுக்கொள்கிறோம்.

2ம் குறுக்குத்தெரு,
கொழும்புத்துறை (CS/30082) J-1

தகவல் :
குடும்பத்தினர்

# 1ஆம் ஆண்டு நினைவஞ்சலி

தோற்றம் 28 . 05 . 1932

மறைவு 08 . 05 . 2024



## சிவலிங்கம் தேவகுஞ்சரம்

திதி- சித்திரை பூர்வபக்க பிரதமை (28.04.2025)

கண் முன்னே வாழ்ந்த காலம்
கனவாகிப் போனாலும்
எங்கள் முன்னே உங்கள் முகம்
எந்நாளும் உயிர் வாழும்
மண் விட்டு மறைந்து
நீங்கள் விண் நோக்கிச் சென்று
ஓராண்டு சென்றாலும்
கண் விட்டு மறையாது
உங்கள் நினைவுகள்

கதிரிப்பாய், அச்சுவேலி. (CS/30142)J-1 குடும்பத்தினர்

# பதின்மூன்றாம் ஆண்டு நினைவஞ்சலி

தோற்றம் 16 . 06 . 1946

மறைவு 28 . 04 . 2012



## புண்ணியமூர்த்தி வேலும்மயிலும்

ஈன்றான் பசிகாண்பான் ஆயினும்
செய்யற்க சான்றோர் பழிக்கும் வினை
என்பதற்கேற்ப பசி பொறுக்காத போதும்
பழி செயல் எதனையும் செய்யக்கூடாது
என எமது வாழ்க்கைத் தரத்தை தக்கவைத்தவர்!

சரித்திர மலை யொன்றாகிய தங்களை
நிறுத்துப் பார்க்க நினைத்து
ஒரு சின்னத் தராசுத் தட்டு நான் தடுமாறுகின்றேன்

உலக மனிதர்களில் இவர் ஒரு உலோக மனிதர்
தங்கம் இவர் நெஞ்சில் தங்கியிருக்கும்
இவருடைய நெற்றியிலே இறைச்சின்னம்!
நெஞ்சினிலே கடமைச் சின்னம்!
இவரின் வெற்றியிலே உண்மை
எனும் விழுச்சின்னம்

தேர்த்திருவிழாவில் வடம்பிடித்து
தேரை அசைப்பதை விடுத்து.
படம் எடுத்து மகிழ்ந்தால்
தேர் அசையுமா!
எமது குடும்ப வடம் இழுத்த தெய்வம் நீர்!
என் சிரிப்பும் உள்ளன்பு குறையாத கவனிப்பும் .
அறநெறி அண்ணல்

சுமக்க முடியாத சுமையை சுமந்து வந்திருக்கிறார்!
சுட்டி ரொம்ப கெட்டி ஆறாதிருக்கும் ரணத்தை இப்போது.
பேனா முனையில் கீறிவிடுகிறேன்
எம் குடும்ப தென்றலே
யுத்த காலங்களில் எத்தனை ஊர்வலங்கள்
எத்தனை கஸ்டங்கள்
தந்தையென்று தள்ளிப் போய் நின்றிருப்பின்
ஆறியிருப்போம் தேறியிருப்போம்.
உங்களை மெழுகாய் உருக்கி எம்மை
மின்விளக்காய் ஏற்றிவைத்தீர்!
ஊரெல்லாம் கூடி உற்சவங்கள் நடத்துகையில்
எம் நெஞ்சில் நாளெல்லாம்
உங்களுக்காக நடக்கிறது விழாக்கோலம்.
தெய்வத்தை கோயிலிலே தேடினாலும் கிடையாது .
உம்மை விட தெய்வம் ஒன்று உள்ளம் இது அறியாது.
பிள்ளைகளாய் உமக்கு பிறந்தவர்கள்
பெற்ற பாக்கியமோ பாக்கியம்
பிள்ளைகளைப் பெற்றெடுத்து உற்றசுகம் ஏதுகண்டீர்
கதிரவன் விழிக்கும் முன்பே கண்விழித்து
உதிரத்தை துளிகளாக உழைப்பென்று தந்தீரே
தலைவணங்காது உம்முடைய
தனிப்பண்புதான் சிறப்பு பப்பா !

பிரன்பற்று,
பண்டத்தரிப்பு. (CS/58110) J-1 குடும்பத்தினர்

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# த.தே.மக்கள் முன்னணி அராலியில் பரப்புரை

தமிழ்த் தேசிய மக்கள் முன்னணியின் தேர்தல் பரப்புரைக் கூட்டம் நேற்று அராலியில் நடைபெற்றது. அராலி மத்தி , அராலி மேற்கு ஆகிய வட்டாரங்களுக்கான வேட்பாளர்களான ஜெயபவானி, தனதீஸ்வரன் ததீஸ்கயரன் ஆகியோரது ஒருங்கிணைப்பில் இந்தக் கூட்டம் நடைபெற்றது.

தமிழ் தேசிய மக்கள் முன்னணியின் தலைவர் கஜேந்திரகுமார் பொன்னம்பலம், நாடாளுமன்ற முன்னாள் உறுப்பினர் ஈஸ்வரபாதம் சரவணபவன், தமிழ் தேசிய மக்கள் முன்னணியின் ஊடக பேச்சாளர் கனகரத்தினம் சுகாஷ், தமிழ் தேசிய மக்கள்



முன்னணியின் வட்டுக்கோட்டை தொகுதி செயற்பாட்டாளர்கள் எனப் பலரும் அதில் கலந்து கொண்டனர். (ஏ-125)

# பெங்களூர் திரில் வெற்றி

ஐ.பி.எல். தொடரில் நேற்று நடைபெற்ற 47ஆவது லீக் ஆட்டத்தில் ரோயல் சலஞ்சர்ஸ் பெங்களூர் அணி 6 விக்கெட்டுக்களால் டெல்லி கப்பிட்டல் அணியை வீழ்த்தியது.

நாணயச் சுழற்சியில் வெற்றிபெற்ற பெங்களூர் அணி களத்தடுப்பைத் தெரிவு செய்தது. முதலில் துடுப்பெடுத்தாடிய டெல்லி அணி 20 பந்துப்பரிமாற்றங்களில் 6 விக்கெட்டுக்களை இழந்து 162 ஓட்டங்களை எடுத்தது. அந்த அணி சார்பாக கே.எல்.ராகுல் அதிகபட்சமாக 41 ஓட்டங்கள் எடுத்தார். பதிலுக்குத் துடுப்பெடுத்தாடிய பெங்களூர் அணி 18.3 பந்துப்பரிமாற்றங்களில் 4 விக்கெட்டுக்களை இழந்து 165 ஓட்டங்களைப் பெற்று 6 விக்கெட்டுக்களால் வெற்றிபெற்றது. அந்த அணி சார்பாக குருனல் பாண்டியா மற்றும் விராட் ஹோக்லி ஆகியோர் அரைச்சதம் கடந்தனர். (ஏ-இ)


# மரண அறிவித்தல்

தோற்றம்
03 . 04 . 1984



மறைவு
27 . 04 . 2025

## காராளசிங்கம் சுஜீவன்

(ஆசிரியர்-வவுனியா வெளிக்குளம் அரசினர் தமிழ் கலவன் பாடசாலை யா/ஊறணி கன்ஷ்ட வித்தியாலயம்)

பன்னாலையைப் பிறப்பிடமாகவும் வசிப்பிடமாகவும் கொண்ட காராளசிங்கம் சுஜீவன் நேற்று (27.04.2025) ஞாயிற்றுக்கிழமை காலமானார்.

அன்னார் காராளசிங்கம் (ஓய்வு பெற்ற ஆசிரியர்-மகாஜனக்கல்லூரி, அருணோதயாக்கல்லூரி, ஓய்வுநிலை அதிபர் தந்தை செல்வா தொடக்கநிலை பள்ளி, குப்பிளான் விக்னேஸ்வராகல்லூரி) வடிவாம்பிகை தம்பதியினரின் அன்பு மகனும் கந்தையா-புஸ்பராணி தம்பதியரின் அன்பு மருமகனும் சிவாஜினியின் அன்புக்கணவரும் தினாஷின் அன்புத்தந்தையும், பிரணவன் தாட்சாயினி ஆகியோரின் அன்புச் சகோதரனும் முருகதாசன், சயனுதா, அயந்தினி டினேஸ்குமார் ஆகியோரின் அன்பு மைத்துனரும் ஜீவாமிர்தம் அவர்களின் மருமகனும் ஆவார்.

அன்னாரின் இறுதிக்கிரியைகள் நாளைமறுதினம் (30.04.2025) புதன்கிழமை காலை 8.00 மணியளவில் அவரது இல்லத்தில் நடைபெற்று தகனக் கிரியைகளுக்காக 10.00 மணியளவில் பூதவுடல் கீரிமலை இந்து மயானத்திற்கு எடுத்துச் செல்லப்படும்.

இவ் அறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக் கொள்ளும்படி கேட்டுக்கொள்கின்றோம்.

தகவல்:
குடும்பத்தினர்
077 078 1854

பன்னாலை
தெல்லிப்பளை

(CS 58111) V-1



# ஆதனஉரிமைபெயர்மாற்றஅறிவித்தல்

வலிகாமம் வடக்குபிரதேசசபை:-மல்லாகம் உப அலுவலகம்
உரிமையாளர் பெயர் :- இராசரத்தினம் ஸ்ரீவெங்கடேசன் பெண் பிரபாகினி
விண்ணப்பதாரர் பெயர் :- திருமதி ஸ்ரீவெங்கடேசன் பெண் பிரபாகினி
முகவரி :- செட்டிச்சோலை, அளவெட்டி வடக்கு, அளவெட்டி

வலிகாமம் வடக்கு பிரதேசசபையின் மல்லாகம் உப அலுவலகத்திற்கு உட்பட்ட வட்டாரம் 12, செட்டிச்சோலை வீதியில் ஆதன இல. 32/1 இல் அமைந்துள்ள மல்லாகம் கோயிற்பற்று, அளவெட்டி இறை "செட்டிச்சோலை" என்ற ஆதனம் திருமதி ஞ. தாமோதரம்பிள்ளை என்ற பெயரில் எமது சோலைவரி ஆதனப் பதிவேட்டில் பதியப்பட்டு காணப்படுகின்றது.

குறித்த ஆதனமானது 2023.02.23 ஆந் திகதிய பிரசித்த நொத்தாரிஸ் ந.தம்பிமுத்தன் அவர்கள் முகதாவில் இலக்கம் 13113 இல் அத்தாட்சிப்படுத்திய அறுதி உறுதி மூலம் "செட்டிச்சோலை" நிலப்பரப்பு 3 குளி 05 விஸ்தீரணமுள்ள ஆதனம் விண்ணப்பதாரரான இராசரத்தினம் ஸ்ரீவெங்கடேசன் பெண் பிரபாகினியை வந்தடைந்துள்ளது. 13113ம் இலக்க உறுதியில் அதற்கான தாயுறுதியாக பிரசித்த நொத்தாரிசு ந. தம்பிமுத்தன் முகதாவில் 2023.02.23ம் திகதியில் நிறைவேறிய 13112ம் இலக்க நன்கொடை உறுதி குறிப்பிடப்பட்டுள்ளதுடன் குறித்த உறுதி மூலம் விண்ணப்பதாரருக்கு ஆதனத்தை விற்பனை செய்த சின்னத்தம்பி சூரியகுமாரன், பெண் தயாளினிக்கு குறித்த ஆதனம் வந்தடைந்துள்ளது. 13113ம், 13112ம் இலக்க உறுதிகள் யாழ்ப்பாண காணிப்பதிவகத்தில் பதிவு செய்யப்பட்டுள்ள G188/85 ஆம் இலக்க காணிப் பதிவுப்புத்தகப் பிரதி ஆதன பெயர்மாற்ற விண்ணப்பத்துடன் சமர்ப்பிக்கப்பட்டுள்ளது. மேலும் 13112ம் இலக்க உறுதியில் அதற்கான தாயுறுதிகளாக பிரசித்த நொத்தாரிசு ந.தம்பிமுத்தன் முகதாவில் 2008.01.27ம் 2007.12.16ம் திகதிகளில் முறையே 6323ம், 6280ம் இலக்கங்களில் நிறைவேறிய சீதன வெளிப்படுத்தல், நன்கொடை உறுதிகள் குறிப்பிடப்பட்டுள்ளதுடன் குறித்த உறுதிகளின் பிரதிகளும், அவை யாழ்ப்பாண காணிப்பதிவகத்தில் பதிவு செய்யப்பட்டுள்ள காணிப் பதிவுப் புத்தகப் பிரதிகளும் விண்ணப்பத்துடன் சமர்ப்பிக்கப்பட்டுள்ளது. 6323ம் இலக்க உறுதிக்கான தாயுறுதிகளாக பிரசித்த நொத்தாரிசுகள் வ.தம்பிப்பிள்ளை, ந.தம்பிமுத்தன் முகதாவில் முறையே 1977.01.26ம், 2003.08.03ம் திகதிகளில் 2209ம், 4080ம் இலக்கங்களில் நிறைவேறிய முறையே அறுதி, திருத்தல் உறுதிகள் குறிப்பிடப்பட்டுள்ளன. 2209ம், 4080ம் இலக்க உறுதிகளும், அவை யாழ்ப்பாண காணிப்பதிவகத்தில் பதிவு செய்யப்பட்டுள்ள காணிப் பதிவுப்புத்தகப் பிரதிகளும் விண்ணப்பத்துடன் சமர்ப்பிக்கப்பட்டுள்ளது. மேற்குறித்த பிரசித்த நொத்தாரிசு வ.தம்பிப்பிள்ளை முகதாவில் 1977.01.26ம் திகதியில் நிறைவேறிய 2209ம் இலக்க அறுதி உறுதி மூலம் குறித்த ஆதனம் வல்லிபுரம் சரவணமுத்து என்பவரால் தனது பேரப்பிள்ளையான சுப்பிரமணியம் மகள் சாதினி என்பவரது பெயரில் கொள்வனவு செய்யப்பட்டுள்ளதுடன் பிரசித்த நொத்தாரிசு ந.தம்பிமுத்தன் முகதாவில் முறையே, 2003.08.03ம் திகதியில் நிறைவேறிய 4080ம் இலக்க திருத்தல் உறுதியில் சுப்பிரமணியம் மகள் பிரபாகினி என்பவரால் பிரசித்த நொத்தாரிசு வ.தம்பிப்பிள்ளை முகதாவில் நிறைவேறிய 2209ம் இலக்க உறுதியில் தனது பெயர் சுப்பிரமணியம் மகள் சாதினி என தவறுதலாகக் குறிப்பிடப்பட்டுள்ளது. மேலும் இவ்விண்ணப்பத்துடன் தொடர்புபட்ட சுப்பிரமணியம் மகள் பிரபாகினி, ஸ்ரீவெங்கடேசன் பெண் பிரபாகினி ஆகிய பெயர்கள் விண்ணப்பதாரரைக் குறித்து நிற்பதுடன் மேற்குறித்த 13113ம் இலக்க உறுதியில் குறித்த விண்ணப்பதாரரின் தேசிய அடையாளஅட்டை இலக்கம் 797921475ஏ என குறிப்பிடப்பட்டுள்ளது.

**ஆதனவிபரம்**

வடமாகாணம், யாழ்ப்பாண மாவட்டம், வலிகாமம் வடக்குப் பகுதி, மல்லாகம் கோவிற்பற்று அளவெட்டி இறை தற்போது அளவெட்டி வடக்கு கிராமசேவகர் பிரிவு து%215, வலிகாமம் பிரதேசசபைப்பகுதி, வலிகாமம் வடக்கு பிரதேச செயலர் பிரிவு "செட்டிச்சோலை" நிலப்பரப்பு மூன்றும் குழி ஐந்தும் (நிலப்.03 குழி 05) வீடும், வடகிழக்குப் பக்கமாக ஒழுங்கையில் இருக்கும் கிணற்றிலும், தூர்வையிலும் இதற்குரிய பங்கும், வழமையான வழிவாய்க்காற் பயன்பாட்டுரித்தும், இதன் எல்லைகள்

கிழக்கு :- ஒழுங்கை
வடக்கு :- இளையதம்பி வேலுப்பிள்ளை கைம்பெண் பொன்னம்மாவுக்கும், பொன்னம்பலம் சிவனேசனுக்கும் உரிய ஆதனம்
மேற்கு :- வேலுப்பிள்ளை வைத்திலிங்கத்தின் ஆதனம்
தெற்கு :- அறுதி விற்பவர்களின் ஆதனம்
இவ்வெல்லைப்படி இதடங்கலும்

மேற்குறித்த ஆதனத்தை ஸ்ரீவெங்கடேசன் பெண் பிரபாகினி என்னும் பெயரில் ஆதன பெயர்மாற்றம் செய்வது தொடர்பாக தொடர்பாக ஏதேனும் ஆட்சேபனை தெரிவிப்பவர்கள் இன்றிலிருந்த முப்பது (30) நாட்களுக்குள் சட்டபூர்வமான ஆவணங்களோடு எழுத்து மூலமாகவோ அல்லது நேரடியாகவோ வெளிநாட்டில் வசிப்பவர்களாக இருந்தால் இங்குள்ள உறவினர்கள் ஊடாகவோ ஆட்சேபனையைத் தெரிவிக்குமாறும் யாரும் ஆட்சேபனை தெரிவிக்காத சந்தர்ப்பத்தில் ஸ்ரீவெங்கடேசன் பெண் பிரபாகினி எனும் பெயருக்கு ஆதன உரிமைமாற்றம் மேற்கொள்ள நடவடிக்கை எடுக்கப்படும் என்பதனையும் இந்த ஆதன உரிமைமாற்றம் செய்வதால் வரக்கூடிய எப்பொறுப்பிற்கும் வலிகாமம் வடக்குபிரதேசசபை பொறுப்பாளி அல்ல என்பதனையும் தெரிவித்துக்கொள்கின்றேன்.

**திரு. சுந்தரேஸ்வரன்சுதர்ஜன்**
**செயலாளர்**
**வலிகாமம் வடக்கு பிரதேச சபை**
**காங்கேசன்துறை (கொல்லங்கலட்டி )**



# மக்கள் வங்கி

## பிராந்திய தலைமைக் காரியாலயம் - யாழ்ப்பாணம்

மக்கள் வங்கி யாழ்ப்பாணம் பிராந்திய தலைமைக் காரியாலயத்துக்கு உட்பட்பட கீழே குறிப்பிடப்பட்டுள்ள கிளைகள்/ சேவை மையங்களில் 29.02.2024 வரை அடகு வைக்கப்பட்டுள்ளதும் (ஒரு வருடத்திற்கு அடகு வைக்கப்பட்ட) 27.05.2025 திகதி வரை மீட்டெடுக்கப்படாத/ புதுப்பிக்கப்படாததுமான நகைகள் கீழ்க்காட்டப்பட்டுள்ள திகதிகள் மற்றும் இடத்தில் காலை 8.30 மணிக்கு தொடங்கி ஏலத்தில் விற்கப்படும்.

**ஏல விற்பனை நிகழும் தினங்கள் - 28.05.2025 மற்றும் 29.05.2025**

| ஏல விற்பனை நிகழும் இடம் | யாழ் ஸ்ரான்லி வீதிக் கிளை |
|---|---|
| கிளைகள் | யாழ்/ஸ்ரான்லி வீதி, தெல்லிப்பளை, யாழ்/பிரதான வீதி, ஊர்காவற்றுறை, நெல்லியடி, அச்சுவேலி, சங்கானை, சுன்னாகம், சாவகச்சேரி, வல்வெட்டித்துறை, யாழ் /பல்கலைக்கழகம், யாழ் /கன்னாதிட்டி, பருத்தித்துறை, கொடிகாமம் |
| சேவை நிலையங்கள் | மானிப்பாய், கொக்குவில் (நாவலர் வீதி), மல்லாகம், காங்கேசன்துறை, உரும்பிராய், புத்தூர், பண்டத்தரிப்பு, கோப்பாய், அளவெட்டி, கைதடி, உடுப்பிட்டி, திருநெல்வேலி, கல்வியங்காடு, இணுவில், புலோலி |

இந்த ஏலங்களை மறு அறிவிப்பு இன்றி இரத்துச் செய்யவும், ஏல விற்பனை செய்யும் இடத்தை மாற்றவும், ஒன்றிணைத்துச் செயல்பட அல்லது இச்செயற்பாட்டை ஒத்திவைக்க வங்கிக்கு உரிமை உண்டு.

பிராந்திய முகாமையாளர், பிராந்திய தலைமைக் காரியாலயம், கன்னாதிட்டி வீதி, யாழ்ப்பாணம்.
தொ.பே.இல: 021-222 2601 : 021-222 2602

PEOPLE'S BANK
Pride of the Nation



# இலங்கைச் சங்கீத சபையின் கண்ணீர் அஞ்சலி



வட இலங்கைச் சங்கீத சபையின் நிர்வாக சபை உறுப்பினர்

**திரு.க.இ. கமலநாதன்**

அவர்களின் துணைவியார்

**திருமதி இராஜபத்மினி கமலநாதன்**

அவர்கள் அமரத்துவம் அடைந்ததை அறிந்து ஆழ்ந்த துயரம் அடைகிறோம்

மனிதநேயம் மிக்க அன்னாரின் பிரிவால் துயருற்றிருக்கும் குடும்பத்தினருக்கு ஆழ்ந்த அனுதாபங்களைத் தெரிவித்துக் கொள்வதோடு அன்னாரின் ஆத்மா சாந்தியடைய எல்லாம் வல்ல தில்லைக் கூத்தனைப் பிரார்த்திக்கின்றோம்.

தலைவர், நிர்வாக சபை உறுப்பினர்கள்
சங்கீத சபை.

(CR/44864) J-1


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## சமநிலையில்...

லான 23ஆவது கிரிக்கெட் தொடர் சமநிலையில் முடிந்துள்ளது.


இரண்டு நாள் ஆட்டமான இந்தக் கிரிக்கெட் தொடர் நேற்றுமுன்தினமும், நேற்றும் சுன்னாகம் ஸ்கந்தவரோதய கல்லூரி மைதானத்தில் நடைபெற்றது.

முதல் இன்னிங்ஸில் துடுப்பெடுத்தாடிய ஸ்கந்தவரோதயக் கல்லூரி அணி 71.3 பந்துப் பரிமாற்றங்களில் அனைத்து இலக்குகளையும் இழந்து 245 ஓட்டங்களைப் பெற்றது. அந்த அணி சார்பாக அதிகபட்சமாக எஸ்.தர்மிலன் 75 ஓட்டங்களைப் பெற்றார். பந்துவீச்சில் தெல்லிப்பழை மகாஜனக் கல்லூரி அணி சார்பாக யு.யோவல் றொசான் 3 விக்கெட்கெட்டுகளையும், யு.தரணிதரன், யு.துளசிகன், கே.கௌதமன் ஆகியோர் தலா இரு விக்கெட்டுகளையும் கைப்பற்றினர்.

பதிலுக்குத் துடுப்பெடுத்தாடிய தெல்லிப்பழை மகாஜனக் கல்லூரி அணி, 86.1 பந்துப்பரிமாற்றங்களில் அனைத்து விக்கெட்டுகளையும் இழந்து 242 ஓட்டங்களைப் பெற்றது. அந்த அணி சார்பாக அதிகபட்சமாக யோவல் றொசான் 84 ஓட்டங்களையும், றியாஸ் முகமட் றியா 59 ஓட்டங்களையும் பெற்றனர். பந்துவீச்சில் ஸ்கந்தவரோதயக் கல்லூரி அணி சார்பாக ம.பிரவணவன், சி.கிரிஷகேசன் ஆகியோர் தலா 4 விக்கெட்டுகளையும், சி.வசீகரன் இரு விக்கெட்டுகளையும் கைப்பற்றினர்.

இரண்டாவது இன்னிங்ஸில் துடுப்பெடுத்தாடிய ஸ்கந்தவரோதய அணி 4 விக்கெட்டுக்களை இழந்து 54 ஓட்டங்களைப் பெற்றிருந்தபோது ஆட்டம் முடிவுக்குவந்தது.

தொடரின் சிறந்த வீரன் மற்றும் சகலதுறை ஆட்ட நாயகனாக தெல்லிப்பழை மகாஜன கல்லூரி வீரர் யு.யோவல் றொசான் தெரிவு செய்யப்பட்டார். சிறந்த துடுப்பாட்ட வீரராக ஸ்கந்தவரோதயக் கல்லூரி வீரர் எஸ்.தர்மிலனும்,



சிறந்த பந்து வீச்சாளராக ஸ்கந்தவரோதயக் கல்லூரி வீரர் எம்.பிரணவனும் தெரிவுசெய்யப்பட்டனர். (அ-எ-இ)

## 5 வயதுக்குட்பட்ட உயிரிழப்புக்கு உடற்கூற்று அறிக்கை கட்டாயம்!

கொழும்பு, ஏப். 28

ஐந்து வயதுக்குட்பட்ட அனைத்துக் குழந்தைகளின் மரணங்களும் இனிமேல் கட்டாய உடற்கூற்றுப் பரிசோதனைக்கு உட்படுத்தப்படும் என்று நீதி மற்றும் தேசிய ஒருமைப்பாட்டு அமைச்சு தெரிவித்துள்ளது.

சிறுவர் இறப்புப் பகுப்பாய்வை வலுப்படுத்துவதற்கான இலங்கையின் முயற்சிகளின் ஒரு பிரதான பகுதியாக இந்த நடவடிக்கை வலியுறுத்தப்பட்டுள்ளது.

இந்த நடவடிக்கை இளம் குழந்தைகளிடையே இறப்புக்கான பொதுவான காரணங்களை அடையாளங்காண்பதற்கும், அதனூடாக மரணங்களைத் தடுப்பதையும் முன்னெச்சரிக்கை நடவடிக்கைகளைச் செயற்படுத்துவதையும் நோக்கமாகக் கொண்டுள்ளது என்று நீதிமன்ற இறப்பு விசாரணை அதிகாரிகளுக்கு இது தொடர்பாக அனுப்பப்பட்டுள்ள சுற்றறிக்கையில் தெரிவிக்கப்பட்டுள்ளது. (அ-எ-இ)

## 2ஆம்...

என்று எதிர்வுகூறப்பட்டுள்ளது. மேற்காவுகைச் செயற்பாட்டால் உருவாகும் மழை, பிற்பகல் 2 மணிக்குப் பின்னர் கிடைக்கும் சாத்தியங்கள் உள்ளன என்றும் தெரிவிக்கப்பட்டுள்ளது.

இது தொடர்பில் யாழ்ப்பாணப் பல்கலைக்கழக புவியியற் துறையின் சிரேஷ்ட விரிவுரையாளரும் வானிலையாளருமான நாகமுத்து பிரதீபராஜா தெரிவித்துள்ளதாவது:-

தற்போது கிடைக்கும் மழை இடி, மின்னலுடன் கூடிய மழையாகவே கிடைக்கும். மின்னல் தாக்கத்தால் பாதிப்புகள் ஏற்படக்கூடிய சாத்தியங்கள் அதிகமுள்ளதால், பொதுமக்கள் அது தொடர்பில் அவதானத்துடன் செயற்படவேண்டும்.

எதிர்வரும் 10ஆம் திகதி வங்காளவிரிகுடாவில் தாழமுக்கம் ஒன்று உருவாவதற்கு வாய்ப்புள்ளது. இந்தத் தாழமுக்கம் வடக்கு மற்றும் கிழக்கு மாகாணங்களின் பல பகுதிகளுக்கும் கணிசமான மழையைக் கொடுக்கும் என எதிர்பார்க்கப்படுகிறது. இந்த ஆண்டு தென்மேற்குப் பருவமழை மே மாதத்தின் பிற்பகுதியில் உருவாக வாய்ப்புள்ளது. இந்த ஆண்டின் காண்டாவனம் எதிர்வரும் 4ஆம் திகதி ஆரம்பித்து 28ஆம் திகதி நிறைவடையவுள்ளது - என்றார். (அ-எ-555)

## 29,244...

2 லட்சத்து 22 ஆயிரத்து 774 பரீட்சார்த்திகள், 51 ஆயிரத்து 587 தனியார் பரீட்சார்த்திகள் என உயர்தரப் பரீட்சைக்கு 2 லட்சத்து 74 ஆயிரத்து 361 பரீட்சார்த்திகள் தோற்றியிருந்தனர். இவர்களில் 64.73 சதவீதமானோர் பல்கலைக்கழக அனுமதிக்குத் தகைமை பெற்றுள்ளனர்.

பாடசாலைகளில் இருந்து ஒரு லட்சத்து 49 ஆயிரத்து 964 பரீட்சார்த்திகளும், 27 ஆயிரத்து 624 தனியார் பரீட்சார்த்திகளும் என மொத்தமாக ஒரு லட்சத்து 77 ஆயிரத்து 588 பேர் பல்கலைக்கழக அனுமதிக்குத் தகைமை பெற்றுள்ளனர்.

அதேவேளை, பரீட்சைக்குத் தோற்றிய பரீட்சார்த்திகளில் 9 ஆயிரத்து 458 பரீட்சார்த்திகள் 3 பாடங்களிலும் ஏ சித்தி பெற்றுள்ளனர். இந்த எண்ணிக்கை 3.45 சதவீதமாகும். 29 ஆயிரத்து 244 பரீட்சார்த்திகள் 3 பாடங்களிலும் சித்தி எய்தத் தவறியுள்ளனர். இது 10.66 சதவீதமாகும்.

2024ஆம் ஆண்டுக்கான க.பொ.த. உயர்தரப் பரீட்சைக்குத் தோற்றிய பரீட்சார்த்திகளில் 456 பேரின் பரீட்சைப் பெறுபேறுகள் இடைநிறுத்தி வைக்கப்பட்டுள்ளன. பாடசாலைப் பரீட்சார்த்திகள் 420 பேரினதும், தனியார் பரீட்சார்த்திகள் 36 பேரினதும் பெறுபேறுகள் நிறுத்திவைக்கப்பட்டுள்ளன. முழுமையான விசாரணைகளின் பின்னர் இது தொடர்பில் உரிய நடவடிக்கை எடுக்கப்படும் - என்றார். (அ-எ-44)

## ஒழுக்காற்று...

இவ்வாறு முறைப்பாடு செய்துள்ளனர்.

கடந்த மாதம் 29ஆம் திகதி பல்கலைக்கழக விடுதி ஒன்றுக்குள் நான்காம் வருட மாணவர் ஒருவர் குடிபோதையில் அறையொன்றில் அனுமதி பெறாது தங்கிருந்தமை தொடர்பாக முதலாம் ஆண்டு மாணவர்களால் முறைப்பாடு செய்யப்பட்டது. அந்த முறைப்பாட்டுக்கு நடவடிக்கை எடுக்காது, முறைப்பாடு செய்த மாணவர்கள் அச்சுறுத்தப்பட்டுள்ளனர் என்று அந்த முறைப்பாட்டில் தெரிவிக்கப்பட்டுள்ளது.

மாணவர்கள் விடுதியில் இருந்து வெளியே செல்லும் நேரம் நிறைவடைந்த பின்னர், முதலாம் ஆண்டு மாணவர்களை இரவு வேளை வீதி வழியாக வேறொரு விடுதிக்கு அழைத்துச்சென்று அறை ஒன்றில் வைத்துப் பூட்டிய பின்னர் கட்டாயப்படுத்தி பொய் வாக்குமூலங்களில் கையொப்பமிட வற்புறுத்தப்பட்டதாகவும், மாணவர்களின் சம்மதம் இன்றி காணொலி வாக்குமூலங்கள் பதிவு செய்யப்பட்டன என்றும் மூன்று மாணவர்களும் தங்களின் முறைப்பாடுகளில் குறிப்பிட்டுள்ளனர்.

பல்கலைக்கழக மானியங்கள் ஆணைக்குழுவின் சுற்றறிக்கைக்கு அமைவாக துணைவேந்தரால் நியமிக்கப்பட்ட விசாரணை அதிகாரிகள் விசாரணை மேற்கொள்ளாமல், மாணவ ஒழுக்காற்று உத்தியோகத்தர்களே விசாரணைகளை மேற்கொள்கின்றனர் என்றும், மாணவர்களை விசாரணைக்கு அழைப்பது முதல் விசாரணை நடைமுறைகள் உட்பட சட்டத்துக்கு முரணாகச் செய்யப்படும் விசாரணைகள் பற்றி பல்கலைக்கழக நிர்வாகத்தின் கவனத்துக்குக் கொண்டுவரப்பட்டபோதும், முறைப்பாடு செய்யும் மாணவர்களுக்கெதிராகவே விசாரணைகள் முன்னெடுக்கப்படுகின்றன என்றும் அந்த முறைப்பாடுகளில் தெரிவிக்கப்பட்டுள்ளது. (அ-எ-26)

## கிளிநொச்சியில்...

கிளிநொச்சியில் நேற்றுப் பகல் சுமார் ஒரு மணிநேரம் கடும் மழை கொட்டித்தீர்த்தது. கனமழையால் பெரும்பாலான வீதிகளில் வெள்ளம் பாய்ந்தோடியதால் போக்குவரத்து நெருக்கடிகளும் ஏற்பட்டன. பல வீடுகளுக்குள் வெள்ளம் புகுந்துள்ளமையால் மக்களின் இயல்பு வாழ்க்கையும் பாதிக்கப்பட்டுள்ளது.

அதேவேளை, நகர்புறங்களில் அமைக்கப்பட்டுள்ள முறையற்ற கட்டுமானங்கள் காரணமாக வெள்ளநீர் வடிந்தோட முடியாதுள்ளது என்றும், அதனாலேயே வெள்ளம் தேங்கி வீடுகளுக்குள் புகுந்துள்ளது என்றும் பொதுமக்கள் விசனம் தெரிவித்துள்ளனர். (அ-எ-214-500-113)

## வெப்பத்...

யில் சடலமாக மீட்கப்பட்டுள்ளார். வெப்பத் தாக்கம் காரணமாக உயிரிழப்பு ஏற்பட்டுள்ளது என்று உடற்கூற்றுப் பரிசோதனை அறிக்கையில் தெரிவிக்கப்பட்டுள்ளது. நடந்து செல்லும்போது வெப்பத் தாக்கம் காரணமாக தோட்டத்துக்குள் வீழ்ந்து இவர் உயிரிழந்திருக்கலாம் என்று தெரிவிக்கப்படுகின்றது.

இறப்பு விசாரணைகளை வலிகாமம் கிழக்கு திடீர் இறப்பு விசாரணை அதிகாரி ஆ.ஜெயபாலசிங்கம் மேற்கொண்டார். (அ-எ-26)

## உள்ளூராட்சி...

முறைப்பாடுகளும், தேர்தல் சட்டங்களை மீறியமை தொடர்பாக 2 ஆயிரத்து 831 முறைப்பாடுகளும், வேறு சம்பவங்கள் தொடர்பாக 189 முறைப்பாடுகளும் கிடைத்துள்ளன என்றும் தேர்தல்கள் ஆணைக்குழு குறிப்பிட்டுள்ளது. கிடைத்த 3 ஆயிரத்து 53 முறைப்பாடுகளில் 2 ஆயிரத்து 491 முறைப்பாடுகள் தீர்த்துவைக்கப்பட்டுள்ளன என்றும், 562 முறைப்பாடுகள் தொடர்பாக நடவடிக்கை எடுக்கப்பட்டுள்ளது என்றும் தேர்தல்கள் ஆணைக்குழு தெரிவித்துள்ளது. (அ-எ-இ)

## தமிழரசுக்...

அராலியின் நடைபெற்ற பரப்புரைக் கூட்டம் ஒன்றில் கருத்துத் தெரிவித்தபோதே அவர் இவ்வாறு தெரிவித்துள்ளார்.

அவர் மேலும் தெரிவித்துள்ளதாவது:-

முன்னர் இருந்த அரசாங்கங்களைப் போன்றே தற்போதைய அரசாங்கமும் செயற்படுகின்றது. நாடாளுமன்றத்தில் எதை வேண்டுமானாலும் நிறைவேற்றக் கூடிய பெரும்பான்மையை அரசாங்கம் கொண்டுள்ளது. ஏக்கிய ராஜ்ஜிய கோட்பாட்டை நிறைவேற்றுவதற்கு அவர்களுக்கு எந்தக் கட்சியின் ஆதரவும் தேவையில்லை.

தமிழ் நாடாளுமன்ற உறுப்பினர்கள் 10 பேர் இருந்தாலும், ஒன்றுபட்டு இல்லை. நாம் ஓர் அமைப்பாக இருந்தால்தான் எதிர்ப்பை வெளிக்காட்டமுடியும். நாம் தமிழ்க் கட்சிகளை ஒன்றுபடுத்த, ஒற்றையாட்சியை நிராகரிக்க இலங்கைத் தமிழரசுக் கட்சியுடன் பேச முயன்றோம். ஆனால் இலங்கைத் தமிழரசுக் கட்சி எமக்குப் புதிய, புதிய கதைகளையே கூறியது.

சுமந்திரன் தேர்தலில் தோற்றால் தமிழரசுக் கட்சியைக் காப்பாற்றலாம் என்று மக்கள் நினைத்தார்கள். ஆனால் இன்று கட்சியே அவருடைய பிடிக்குள் சென்றுள்ளது. ஜே.வி.பி. கொண்டுவரவுள்ள ஒற்றையாட்சியை ஆதரிக்கவுள்ள தமிழரசுக் கட்சியை நாம் நிராகரிக்கவேண்டும். சுமந்திரனின் தலைமைத்துவம் உள்ள வரையில் அந்தக் கட்சிக்கு மக்கள் வாக்களிக்காவிட்டால், புதிய தலைமை ஒன்று தோற்றம்பெறும்.

வட்டுக்கோட்டைத் தொகுதியின் அமைப்பாளராக தமிழரசுக் கட்சியை வழிநடத்திய சரவணவபன், சுமந்திரனின் தவறான கொள்கையால் கட்சியைவிட்டு வெளியே வந்திருக்கின்றார். நீங்கள் உங்கள் மண்ணைக் காப்பாற்றச் சரியான முடிவை எடுங்கள் - என்றார். (அ-எ-125)

## காய்ச்சல்...

வராவார். கடந்த 26ஆம் திகதி காய்ச்சலால் பீடிக்கப்பட்ட இவர் நேற்றுமுன்தினம் மாலை யாழ்ப்பாணம் போதனா மருத்துவமனையில் சேர்க்கப்பட்டிருந்தார். நேற்று அதிகாலை அவர் உயிரிழந்தார்.

இறப்பு விசாரணைகளை யாழ்ப்பாணம் போதனா மருத்துவமனையின் திடீர் இறப்பு விசாரணை அதிகாரி ந.பிறேம்குமார் மேற்கொண்டார். (அ-எ-26)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## தவறைத்...

செயலாளர் எம்.ஏ.சுமந்திரன் தெரிவித்துள்ளார். சுன்னாகத்தில் உள்ள தனியார் விருந்தினர் விடுதியில் நடத்தப்பட்ட தேர்தல் பரப்புரைக் கூட்டத்தில் இவ்வாறு தெரிவித்துள்ளார்.

அவர் மேலும் தெரிவித்துள்ளதாவது:-

நாங்கள் உள்ளூராட்சி சபைகளை நிர்வகிக்கத் தெரிந்தவர்கள். 'எல்போர்ட்' போட்டுக் கொண்டு தற்போது பழக ஆரம்பிப்பவர்கள் அல்ல. பழக ஆரம்பிப்பவர்கள் என்ன செய்வார்கள் என்பதை யாழ்.மாவட்டத்திலிருந்து தெரிவான ஆளும் கட்சியின் மூன்று நாடாளுமன்ற உறுப்பினர்களைப் பார்த்தால் உங்களுக்குத் தெரியும்.

அதில் பட்டம் பெற்ற மருத்துவர் ஒருவரிருக்கின்றார். அவர் படித்தவர், புத்திசாலி என்பதால் வாயை இறுக்கி மூடிக் கொண்டிருக்கின்றார். ஒரு தடவை வாயைத் திறந்து தையிட்டி விகாரை தொடர்பில் கூறும் போது நாங்கள் சொல்வதொன்றும் கேட்க மாட்டார்கள் என்று உண்மையைச் சொன்னார். அவ்வாறு அவர் உண்மையைச் சொன்ன காரணத்தாலோ என்னவோ இனிக்கதைக்க வேண்டாம்என்றுகூறினார்களோ தெரியவில்லை. அதன்பின்னர் அவர் வாயே திறப்பதில்லை.

ஏனைய இருவரும் இனித்தான் கதைக்க, பேசப் பழக வேண்டியவர்கள். ஒரு சபையில் எப்படிப் பேசுவதென்று தெரியாது. மக்களுடன் எப்படிக் கதைப்பது என்று தெரியாது. அதற்காக அவர்கள் படிப்பறிவு இல்லாதவர்கள் என்று நான் கூறவரவில்லை. முறையாகப் படிக்காதவர்கள் கூட நன்றாக மக்களுடன் பழகுவார்கள், பேசுவார்கள், தங்களுடைய கருத்துக்களைச் சரியான வகையில் பகிர்ந்து கொள்வார்கள். ஆனால், இந்த இரு நாடாளுமன்ற உறுப்பினர்களும் எங்களுக்கு என்ன கூறுகிறார்கள் என்பது எங்களுக்கும் புரியவில்லை. அவர்களுக்கும் புரியவில்லை. யாழ்ப்பாணம் தான் கல்விக்குப் பெயர் போன இடம், படித்தவர்களைப் புகழுகின்ற இடம் என்றெல்லாம் பெரும் பெருமை பேசிக் கொண்டிருந்த நிலையில் கடந்த நாடாளுமன்றத் தேர்தலில் இப்படியான பிரதிநிதிகளை நாடாளுமன்றத்திற்கு அனுப்பியதை நினைத்துத் தற்போது வெட்கப்படுகிறார்கள். இது பெரியதொரு இழுக்கு. எனினும், அதை யாழ்ப்பாணத்துத் தமிழ்மக்கள் உணர்ந்தவர்களாகத் திருத்தியமைப்பதற்கானதொரு சந்தர்ப்பம் எங்களுக்கு உடனடியாகவே வந்து விட்டது. 'எல்போர்ட் 'போட்டுக் கொண்டு பயணிக்கும் தற்போதைய அரசாங்கம் சித்தி பெற்று விட்டார்களா? இல்லையா? என்பதற்கான தீர்ப்பை மக்கள் சொல்ல வாய்த்த சந்தர்ப்பமாக உள்ளூராட்சி சபைத் தேர்தல் அமைந்துள்ளது. முக்கியமாக யாழ்ப்பாண மக்கள் இதுதொடர்பான சரியான தீர்ப்பைக் கூறியே ஆகவேண்டும் – என்றார்.

(அ–எ–66)


## காணி விற்பனைக்கு

உரும்பிராய் கற்பகப்பிள்ளையார் கோவில் வீதியில் 3 பரப்பு காணியுடன் கூடிய வீடு விற்பனைக்கு. நல்லூர் சாங்கிலியன் வீதியில் 2 பரப்பு காணி விற்பனைக்கு உண்டு.

தொடர்பு:- 077 794 8012

## அறிவித்தல்



எமது ஹேலிஸ் சோலார் நிறுவனத்தில் வியாபார அபிவிருத்தி முகாமையாளராக பணியாற்றிய எஸ். ரதீஸ்வரனின் சேவையானது ஒழுக்காற்று விசாரணை நடவடிக்கை காரணமாக தற்காலிகமாக இடைநிறுத்தப்பட்டுள்ளதோடு. அவருடனான எந்தவொரு கொடுக்கல் வாங்கல்களுக்கும் நிறுவனம் பொறுப்பாளியாகாது.

ஹேலீஸ் ஃபென்டன்ஸ் லிமிடெட்
180, டீன்ஸ் சாலை,
கொழும்பு 10, இலங்கை.

## விஷ்டம் தொழினுட்பக் கல்லூரி

விஸ்டம்

இல 63, சிவன் வடக்கு வீதி, வண்ணார்பண்ணை யாழ்ப்பாணம்.

**A/L 2024** தொழினுட்பப் பிரிவில் சித்திபெற்றுள்ள எமது கல்லூரி மாணவர்களை பாராட்டி வாழ்த்துகிள்றேபம்

பல்கலைக்கழக நுழைவுத் தகுதியைப் பெற்றுள்ள எமது மாணவர்களின் ஒரு தொகுதியினர்



தொழினுட்பப்பிரிவில் ஒவ்வொரு வருடமும் அதிகளவான மாணவர்களைப் பல்கலைக் கழகம் அனுப்புகின்றோம் என்ற பெருமையுடன்

உயிர்முறைமைகள் தொழினுட்பவியல்

| மாணவர் பெயர் | பெறு பேறு | மாவட்ட நிலை | மாவட்டம் |
|---|---|---|---|
| ஜே.நுஷாந் | 3A | 01 | யாழ் |
| [illegible] | B2C | 01 | கிளி |
| தீ.கீர்த்தனா | 2BC | 17 | யாழ் |
| [illegible] | B2C | 03 | கிளி |
| [illegible] | 3C | 37 | யாழ் |

A/L 2025 Day பிரிவுக்கான வகுப்புக்கள் 10.05.2025 காலை 8.00 மணிக்கு ஆரம்பமாகின்றன.

தொடர்புகளுக்கு- 077 248 7774/076 552 9093

## Smart Science Academy

A/L கணித-விஞ்ஞானப் பிரிவு
Day Classes

Physics : திரு. T.சம்பந்தன் B.Sc P,GDE
Chemistry : திரு S.சுரேஸ்குமார் B.Sc (Hons) BGDE
Biology : திரு M.சுதா B.Sc with Ed
Com.Maths: திரு V.ஹரிவண்ணன் B.Sc.PGDE

ஆரம்பம்: 07.05.2025 அனுமதிகள் வழங்கப்படுகின்றன
N-154 A, Navalar Road, Jaffna

தொடர்புக்கு:
077 787 2903, 077 555 9028

## வீடு வாடகைக்குத் தேவை

வடமராட்சி நெல்லியடி மற்றும் கரவெட்டி ஆகிய பகுதிகளில் இருவர் கொண்ட குடும்பத்திற்கு வீடு வாடகைக்குத் தேவை.

தொடர்பு:- 077 635 4224

## வீடு வாடகைக்குத் தேவை

கொக்குவில், கோண்டாவில் அல்லது அண்மித்த பகுதிகளில் வீடு வாடகைக்குத் தேவை.

074 149 5659, 077 735 7677

## A/L தொழினுட்பப்பிரிவு

## Techna
Technical Institute

Smart Thinking Leads To Innovate

A/L 2024 உயர்தரப் பரீட்சையில் சிறந்த பெறுபேறுகளை பெற்ற மாணவர்களை பாராட்டி வாழ்த்துகின்றோம்

### பொறியியல் தொழினுட்பவியல்

| பெயர் | பெறுபேறு | மாவட்ட நிலை | பெயர் | பெறுபேறு | மாவட்ட நிலை |
|---|---|---|---|---|---|
| J.சியாமளன் | A 2B | 04 | A.வேணுசன் | A 2C | 27 |
| S.சந்தோஸ் | 3A | 02 | S.சுபானுயா | B 2C | 29 |
| S.சுவேதன் | 2B C | 02 | C.சதுஜன் | B 2C | 30 |
| P.கோபிதரன் | 3C | 06 | K.கவிநயா | 3C | 33 |
| B.நேருஜன் | A B C | 07 | T.சிந்துஜன் | B 2C | 34 |
| U.ஆருத்திரன் | 2B C | 08 | J.கலைச்சாந்த் | B C S | 35 |
| B.சுடரோன் | 3B | 10 | L.ஜெனுசாந்த் | 3C | 36 |
| J.சுபர்ஷா | 3B | 12 | K.யதுசன் | 3C | 37 |
| A.டிலக்சன் அருள்ராஸ் | A B C | 14 | U.ஜெயசூர்யா | 3C | 39 |
| K.ஆரூரன் | 3B | 16 | B.அருண்ஜா | B 2C | 52 |
| U.லவகுமார் | 2B C | 17 | L.நிதுசன் | B 2C | 55 |
| S.கஜானன் | B 2C | 19 | K.புகழன் | C 2S | 58 |
| U.சுவேந்தன் | 2B C | 21 | S.R.நுஸ்கி அஹமட் | C 2S | 08 |
| J.ஜெயவினு | 2B C | 23 | M.H.M.ஹசன் | A 2S | 10 |


### உயிர் முறைமைகள் தொழினுட்பவியல்

| பெயர் | பெறுபேறு | மாவட்ட நிலை | பெயர் | பெறுபேறு | மாவட்ட நிலை |
|---|---|---|---|---|---|
| S.யதுராகவி | A B C | 04 | S.சிவதனுசியா | B 2C | 32 |
| T.அங்கசன் | 2B C | 11 | B.சரணிகன் | 2C S | 39 |
| S.சிவாசன் | 2B C | 12 | K.விமலன் | 2C S | 41 |
| S.சாகித்தியா | 2B C | 13 | T.விஜிந்தா | 3C | 42 |
| M.குயின்சியா | 2B C | 15 | M.பவனீதன் | 3C | 46 |
| S.தர்சிகன் | 2B C | 16 | S.ஜெனிபர் சாரா | 3B | 10 |
| K.விதுர்ஷனா | 2B C | 18 | Y.நவின் | 2B C | 12 |
| S.கஸ்விலி | B 2C | 21 | S.ஹம்சிகா | 2B C | 15 |
| J.பகின்சனா | 2B C | 25 | B.அகர்கான் | B 2C | 18 |
| S.ஜதுஷா | 3C | 26 | J.றியாஸ் | 3C | 11 |
| S.விஷாகன் | 3C | 30 | M.ஆதிரா | 2C S | 18 |

A/L 2024 REPEAT BATCH
A/L 2026 புதிய பிரிவு
ஆரம்பம்
30.04.2025 புதன்கிழமை மாலை 3.30மணிக்கு

077 170 3549

## பாராட்டி வாழ்த்துகின்றோம்



யா/ புன்னாலைக்கட்டுவன் சித்தி விநாயகர் வித்தியாலயத்தின் அதிபராகப் பணியாற்றி வேலணை கோட்டக் கல்விப் பணிப்பாளராக பதவி உயர்வு பெற்றுச் சென்றுள்ள

**திரு. சிவபாதசுந்தரம் சிவகுமார்**
**B.A (Hons), PGDE, M.A (Tamil)**
**M.A (Culture), M.Ed, PGDISNE (NIE)**
**PGDISNE (OUSL), DSM, PGDEM**

மேலும் பல பதவி உயர்வுகளை பெற்றிட அவர்களைப் பாராட்டி வாழ்த்துகின்றோம்.

வாழ்த்துவோர்:
பெரியப்பா, பெரியம்மா,
பிள்ளைகள், மருமக்கள்,
குடும்பத்தினர்.

(CS/3045) J-1


செய்தி : 021 493 0000 – விளம்பரம் : 021-493 1111
விளம்பரம்: advt@uthayan.com
இப்பத்திரிகை நியூ உதயன் பப்ளிகேசன் (பிறைவேற்) லிமிட்டெட் நிறுவனத்தினால் ... அவர்களது பணிமனையில் 28.04.2025 இல் அச்சிட்டு வெளியிடப்பெற்றது.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org